# திராவிடம் பிரிந்தால் வாழுமா?

ஆக்கியோர் :

**அ. கு. பாலசுந்தரன், பி. ஏ., எல். டி.,**

ஆசிரியர், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி, சென்னை.

**தனலட்சுமி பதிப்பகம்,**

**திருவல்லிக்கேணி, சென்னை**

உரிமை
ஆக்கியோருடையது.

1949

[விலை : அணு 8

M. I. P. PROJECT
Microfilmed.

# முன்னுரை

இப்போது இந்திய தேசியப் பாடலாக இருந்து வரும் 'ஜன கண மன' என்ற பாடலில், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் வழங்கும் நாடுகளை ஒன்ருகச் சேர்த்துத் 'திராவிட உத்கல வங்கா' என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. காந்தியும் பெரியாரும், 'முஸ்லிம்கள் ஒரு தனி இனம் (Separate Nation) ஆகமாட்டார்கள். அவர்கள் இந்துக்கள் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள். இந்து மதத்தை விட்டு இஸ்லாமிய மதத்தைத் தழுவினவர்கள். மதத்தில் மாறுபட்டவர்களே யன்றி, இனத்திலும் கலாசாரத்திலும் மாறுபட்டவர்கள் அல்ல' என்று சொன்னரே ஒழிய, ஆரியர் திராவிடர் என்ற பிரச்னையினல் அவ்வப்போது தென்னட்டில் நேர்ந்த பிணக்குகள், சச்சரவுகள் அவருடைய காதில் பட்டபோதெல்லாம், 'ஆரியராவது திராவிடராவது' என்று நம்மவர்களிலேயே சிலர் சொல்லுகிற மாதிரி சொல்லாமல், 'தமிழ் ஒரு பழமையும் பெருமையும் வாய்ந்த இனிய மொழி. அதைக் கற்றுக் கொள்ள நானும் முயன்றேன். தமிழ்ப் பெண்மணியாகிய நாகம்மையாரால்தான் என் சத்தியாக்கிரகத்துக்கு வெற்றி கிடைத்தது.' என்றெல்லாம் சொல்லித் தென்னட்டவருக்குச் சமாதானம் சொல்லி வந்தார்.

அரசியலில் அவரது தத்துப்பிள்ளை என்று சொல்லப்படும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், சமீபத்தில், அரசியல் நிர்ணய சபையில் தேசிய பாஷையைப் பற்றி விவாதம் நடந்த போது, 'தென்னட்டினர் ஒரு தனிக்கலாசாரம் உடையவர்கள். அவர்கள்மீது எம்மொழியையும் கட்டாயமாகத் திணிக்கக்கூடாது. தேசிய பாஷை என்ற விஷயத்தில் நாம் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டும்' என்று எச்சரிக்கை செய்தார். அவர் பல்லாண்டுகட்கு முன்னே எழுதின சுயசரிதையிலும் (Auto-Biography) 'தென்னட்டில் வாழ்பவர்கள் திராவிடர்கள். ஆரியர், திராவிடர்களுக்குள் பழைய காலத்தில் நடந்த போராட்டங்களே இராமாயணம் என்ற காவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன' என்று எழுதி வைத்திருக்கிறார்.

தென்னாட்டுத் திராவிடர்கள் ஒரு தனி மொழியையும், தனிக் கலாசாரத்தையும் உடையவர்கள்; அவர்கள் வாழும் தென்னாடு தனியான இயற்கைப் பண்புகளையும் அரண்களையும் கொண்ட ஒரு தனி நாடு என்பதில், அயலார் எவருக்கும் எந்நாளும் ஐயப்பாடு இருந்ததே இல்லை. மிகப் பழைய காலத்திலகூட 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று மாணிக்கவாசகரே பாடியிருக்கிறார்.

ஆனால் நம்மவர்களில் பெரும்பாலாருடைய மனதில் இப் பிரச்னை தோன்றியதே இல்லை. நம் நாட்டில் வந்துள்ள ஆரிய கலாசாரத்துக்கும், நமது சொந்த கலாசாரத்துக்கும் உள்ள வித்தியாசங்களைக் கண்கூடாகப் பார்த்தும், அக்கலாசாரத்தை மேற்கொண்டவர்களின் பெருமிதத்தால் பலவித கொடுமைகளுக்கும் அவமானங்களுக்கும் ஆளாகியிருந்தும்கூட, நம்மவர் அதைப்பற்றிச் சிந்தித்ததே கிடையாது. வள்ளல் சர்.பி. தியாகராயசெட்டியாரும், வீரர் டி.எம். நாயரும் பிராமணர், பிராமணர் அல்லாதார் என்ற பிரச்னையை அடிப்படையாகக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றிய பின்னே, சர். ஏ. டி. பன்னீர் செல்வம் செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டுக்குத் தலைமை வகித்து, 'ஆரியர் வேறு, திராவிடர்வேறு' என்று பெருமுழக்கஞ் செய்தபின்னே, பெரியார் ஈ. வெ. ராமசாமி 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற பேரொலியைக் கிளப்பிய பின்னே, நம் நாட்டினர் அதைப்பற்றி சிந்திக்கத் தொடங்கினர்.

நம் நாட்டில் உள்ள அரசியலினர் (Politicals) பலர், திராவிட இயக்கத்துக்கு எதிராக உள்ளவர்கள்கூட, திராவிடம் பிரிந்தே ஆகவேண்டும் என்ற முடிவுக்கு இப்போது வந்துள்ளனர். நம் மாகாண மந்திரிகள் கூட மத்திய சர்க்காரின் தலையீட்டைப் பொறுக்கமுடியாமல், 'இம்மாதிரியாக நடந்தால், திராவிடம் பிரிய வேண்டும் என்று சொல்பவரின் கை வலுத்துப் போகும்' என்று மத்திய சர்க்காருக்கு எச்சரிக்கை செய்யத் தொடங்கிவிட்டனர். நம் நாட்டில் வாழும் பலதிறப்பட்ட மக்களும் அதைப்பற்றிப் பேசத் தொடங்கியுள்ளனர். இங்கிலையில் பிரிவினையை முக்கிய நோக்கமாகவுடைய திராவிட இயக்கத்தினர், தங்கள் நோக்கத்தின் விவரங்களையும், அந்நோக்கத்துக்கு ஏற்ப நம்நாடு அடைந்துள்ள தகுதிகள்,

நோக்கம் கைகூடினல் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், அந்நஷ்டங்களை ஈடுசெய்யக்கூடிய ஏற்பாடுகள் முதலியவைகளைப்பற்றி, தெளிவான முடிவான அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பது மிக அவசியமாகும். அதற்குத் துணையாயிருக்கவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

திராவிட நாடு இந்திய யூனியனேடு இணைந்திருப்பதால், இந்தியா என்பது பெரிய நாடாகக் கருதப்பட்டு, உலகத்தினரின் நன் மதிப்புக்கு பாத்திரமாகி, சர்வதேச சங்கத்தில் மிக மரியாதையாகவே நடத்தப்பட்டு வருகிறது. நம் நாட்டவராகிய திரு. A. ராமசாமி முதலியாரை சர்வதேச சங்கத்தினர் தங்கள் தலைவர்களில் ஒருவராக இருக்கும்படி தெரிந்தெடுத்தனர். இது மிக மிக விரும்பத்தக்க நிலைமையே யாகும். ஆனல் இப்போதுள்ள மாதிரியில் (Union type of government) நம் நாடு இந்திய யூனியனேடு பிணைந்திருப்பது, நம் நாட்டின் நல்ல நிர்வாகத்துக்கு இடையூருகவே இருந்துவருகிறது. ஆகவே அம்மாதிரி மிக நெருக்கமான முறையில் பிணைந்திராமல், சிறிது தளர்த்திக்கொண்டு, நம் நாடு தலை நிமிர்ந்து நிற்கவேண்டும் என்று விரும்புகிறேம். அப்போது நம் நாட்டு நிர்வாகம் மத்திய சர்க்காரின் தலையீடின்றி நடக்கும். நமது பொக்கிஷ நிலையும் அந்தஸ்தும் உயரும். நம் நாட்டில் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளுக்கு விளம்பர வரி விதிப்பதும், நம் நாட்டில் காட்டப்படும் சினிமா படங்களைப் பரிசோதிப்பதும் ஆன சில்லரை விஷயங்கள் கூட, மத்திய சர்க்காரின் வசத்திலும் பார்வையிலும் இருக்கவேண்டு மென்று சொல்ல எவரும் முன்வரமாட்டார்கள்.

அம்மாதிரியான பிரிவினையை, மத்திய சர்க்காருக்குப் பெருத்த சங்கடம் ஒன்றும் ஏற்படாத வகையில் எவ்வாறு செய்து கொள்ளலாம்? அதற்குப்பின் நம் நாட்டில் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் எவை? அவ்வேற்பாடுகளை எப்படி அமுலுக்குக் கொண்டு வந்தால் நம் மக்கள் நல்வாழ்வு வாழ முடியும்? என்ற விஷயங்களை நம்மால் கூடிய வரையில் தெளிவாக இந்நூலில் விவரித்துள்ளோம். பிழைகள் இருப்பின் பொறுக்க.

சென்னை,
1—11—1949

அ. கு. பாலசுந்தரன்.

# உள்ளுறை

பக்கம்

1. திராவிட நாடு : ... 1

வளங்கள் - வீரம் - பழைய நிலை - தற்கால நிலை - ஆங்கில ஆட்சி - அடிமை மனப்பான்மை - அயலாரின் ஆதிக்கம் - நகரத்து செட்டிமார்கள் - விடுதலை.

2. பொருளாதாரம் : ... 11

கால் நடைகள் - தேவைகள் - பெருத்த வருமானங்கள் - மற்ற வருமானங்கள் - மது விலக்கு - உதவி இல்லாமை - சலுகை இன்மை - ஆட்சியினரின் அவஸ்தை - உண்மையான விடுதலை.

3. அவசரமான சீர்திருத்தங்கள் : ... 23

சமுதாய இழிவுகள் - மதபேதங்கள் - புதிய விவசாய முறைகள் - கிராம முன்னேற்றம்-உள்நாட்டு வியாபார வசதிகள் - பெருத்த வியாபாரங்கள் - தொழில்விருத்தி-ஆராய்ச்சிகள் - வாகன அமைப்புகள் - மூலதனம்.

4. தென்னாட்டின் ஒற்றுமை : ... 35

சமஸ்தானங்களின் கூட்டுறவு-மொழிவாரி மாகாணங்கள் - ஒன்றிய திராவிடம் - மூலாதாரப் பொருள்கள் - பொக்கிஷ நிலை.

# திராவிடம் பிரிந்தால் வாழுமா ?

## 1. திராவிட நாடு

திராவிடநாடு என்பது, பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சொல்லுகிறபடி, இப்போது சென்னை ராஜதானி என்று சொல்லப்படும் நிலப்பரப்பு ஆகும். அது இந்திய யூனியனில் ஒரு மாகாணமாக இருந்த போதிலும், அளவில் சிறியதல்ல. சுமார் 1½ லட்சம் (143,879) சதுர மைல் பரப்புள்ளது. ஐரோப்பா கண்டத்தில் உள்ள ஸ்விட்ஸர்லண்ட், டென்மார்க் போன்ற தனிச் சுதந்திர நாடுகளைவிட மிகப் பெரியது. நம்மை முன் ஆண்டிருந்த ஆங்கிலரின் தீவுகளைப்போல (Great Britain) 1½ மடங்கு பரப்புடையது. சுமார் 5 கோடி (49,841,000) மக்களைக் கொண்டது.

### வளங்கள்

உலகத்திலுள்ள இயற்கை வளங்களில் ஏறக்குறைய எல்லாவற்றையும் நம்நாடு பெருத்த அளவில் உடைத்தாயிருக்கிறது. பச்சைப் பசேறென்று காட்சி யளிக்கும் கணக்கற்ற மலைகள், அவற்றின் சரிவுகளில் உலகமக்களில் சற்றேறக்குறைய எல்லாருமே எதிர்பார்க்கும் காப்பி, தேயிலை விளையும் தோட்டங்கள், அகில், சந்தனம், தேக்கு யானைகள் மலிந்த காடுகள், எத்தனையோ நீண்ட நதிகள், அவற்றில் பல என்றும் வற்றாத ஜீவநதிகள், அவற்றின் குறுக்கே, அளவில் உலகத்திலேயே இணையற்ற பெரிய அணைக்கட்டுகள், அவ்வணைகளிலிருந்து பல திசைகளாகப்

பரந்தோடும் ஆயிரக்கணக்கான மைல் நீளமுள்ள நீர்ப் பாசனக் கால்வாய்கள், அக்கால்வாய்களின் கரைகளில் லட்சக்கணக்கான ஏகர் பரப்புள்ள நன்செய், புன்செய் நிலங்கள், தங்கம், இரும்பு, நிலக்கரி, மாங்கனீஸ், அப்பிரகம் முதலிய அரிய கருப்பொருள்களைக் கொண்ட சுரங்கங்கள், பல பெரிய உப்பளங்கள், மீன் பண்ணைகள், முத்துக் குளிக்கும் துறைகள், உலகத்தைச் சுற்றிப் பிரயாணம் செய்யும் பெரிய கப்பல்களுக்கு அபயம் அளிக்கும் விசாலமான இயற்கைத் துறைமுகங்கள், 1500 மைல் நீளமுள்ள அழகிய கடற்கரைகள் முதலிய இயற்கை வளங்கள், வசதிகள் மலிந்த நாடு.

இவை மட்டுமா ? சர்வதேச சங்கத்தில் தலைமை வகிக்கும் ஆற்றல் உள்ளவர்கள், பெருத்த நாடுகளிடையே தோன்றும் பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்த்துவைக்கும் திறம் உடையவர்கள், யந்திரங்கள், மோட்டார் வண்டிகள் முதலியவைகளைச் செய்யவல்ல நிபுணர்கள் பலரைக் கொண்டு, அறிவுத் துறையிலும் ஆற்றல் துறையிலும் சிறந்து விளங்கும் இயற்கை எழில்கள் நிறைந்த நாடு திராவிடநாடு.

## வீரம்

வீரத்திலும் போர்த் திறமையிலும் கூட, நம் நாட்டு மக்கள் மிகச் சிறந்தவர்களாகவே விளங்குகின்றனர். கடந்த இரண்டாம் உலகப் போரில் வட ஆப்பிரிக்காவிலும் இத்தாலியிலும் வெற்றி கண்ட ஆங்கிலப் படைகளில், இந்தியாவிலிருந்து சேர்க்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் திராவிடர்களே ஆவர். சமீபத்தில் டெல்லியில் நடந்த இந்து முஸ்லிம் கலவரமும், சென்னைப் படையைக் கொண்டுதான் கண்ணியமான முறையில் அடக்கப் பட்டது. இப்படையினர் அங்கே பட்சபாதமில்லாமல், மிகப் பக்குவமாகவும், நேர்மையாகவும் நடந்துகொண்டார்

கள் என்றும்," காஷ்மீரிலும் மலைநாட்டினருடன் மிகுந்த வீரத்துடன் இன்றும் போர் செய்து வருகிறார்கள் என்றும், பண்டித நேரு அவர்களே பலமுறை நம் படையினரைப் புகழ்ந்து பேசியுள்ளார்.

## பழைய நிலை

இவ்வளவு வளத்தையும் வீரத்தையும் திறனையும் நம்நாடு நேற்று, முந்தின நாள் கொண்டதல்ல. பழங்காலத்தில் இப்போதுள்ள அளவுக்குப் பன்மடங்கு அதிகமாகவே இயற்கை செயற்கை வளங்களையும் ஆற்றலையும் உடைத்தாயிருந்தது.

திருச்சியில் முன்காலத்தில் செய்யப்பட்டு வந்த வூட்ஸ் ஸ்டீல் (Wootz Steel) என்ற ஒருவித எஃகிலிருந்து, அக்காலத்தில் உலகத்திலேயே பெயர் போனதாகக் கருதப்பட்ட டாமஸ்கஸ் வாள்கள் (Damascus swords) செய்யப்பட்டன.

கி. பி. முதல் நூற்றாண்டிலேயே கள்ளிக்கோட்டை, முசிறி, காவிரிப்பூம்பட்டினம் முதலிய துறைகளில், ஐரோப்பாவிலிருந்து கப்பல்கள் வந்து தங்கியிருந்து, தங்கம், வைரம், முத்து, பவழம், யானைத் தந்தம், மிளகு, ஏலம் முதலிய வாசனைத் திரவியங்கள், வெற்றிலை, நெய், மது, மெல்லிய பருத்தித் துணிகள், பட்டாடைகள், சரிகை முதலிய விலை யுயர்ந்த பொருள்களையும், குரங்கு, யானை, மயில், கிளி முதலிய பறவைகளையும் தங்கள் நாடுகளுக்குக் கொண்டு போகும்.

வீரத்திலும் போர்த்திறனிலும், நம் நாடு பழைய காலத்தில் இப்போதிருப்பதை விடப் பல்லாயிர மடங்கு மிகுந்திருந்தது என்னலாம். கரிகாலன் என்ற சோழ மன்னன், வடக்கே இமயமலை வரை படையெடுத்துச் சென்று, இடையில் உள்ள நாடுகளின் அரசர்களை எல்லாம் வென்று அடக்கித், தனது புலிக்கொடியை இமய மலையின்

மீதே பொறித்துவிட்டு வந்தான் என்று பழைய தமிழ் நூல்கள் கூறுகின்றன.

செங்குட்டுவன் என்ற சேர மன்னன், ஒரு பெரிய கப்பல் படையுடன் புறப்பட்டு, இலங்கையைச் சுற்றிக் கொண்டு போய்க் கலிங்க நாட்டில் (ஒரிஸா மாகாணம்) கரையேறிக், கங்கை நதியின் கரைகளையும் கடந்து, அங்கே தமிழ் மன்னர்களைப்பற்றி இழிவாகப் பேசிக் கொண்டிருந்த கனகன், விசயன் என்ற ஆரிய மன்னர்களோடு போரிட்டு வென்று, அவர்களைச் சிறை பிடித்தான் என்று பழைய நூல்களும் கல்வெட்டுகளும் கூறுகின்றன. கனகன் என்பது செங்குட்டுவன் காலத்தில் வட இந்தியாவில் ஆண்டிருந்த கனிஷ்கன் என்றும், விசயன் என்பது காஷ்மீரை ஆண்டிருந்த விஜயாதித்தன் என்றும் சரித்திர ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறன பழம் பெருமைகளை எல்லாம் நாம் இங்கே எடுத்துச் சொல்வது பழமைப் பித்தினால் அல்ல. யந்திர தளவாடங்கள் அதிகமாயில்லாத அந்தப் பழைய காலத்திலேயே அவ்வளவு வீரமும் ஆற்றலும் நிறைந்த செயல்களை ஆற்றி வந்த நாம், யந்திர வசதிகளை அதிகமாகக்கொண்ட போர் முறைகளைக் கையாளும் இக்காலத்தில், முன்பை விட பன்மடங்கு அதிகமான வீரம் உடையவர்களாக ஏன் இருக்கக் கூடாது என்பதைக் காட்டவே ஆகும்.

## தற்கால நிலை

இப்பேர்ப்பட்ட வீரமும் தீரமும் கொண்ட வேந்தர்களின் வழிவந்த நம் நாட்டு ஆட்சியினர், தங்கள் மாகாணத்தைப் பொருத்த விஷயங்களில் கூடத் தங்கள் அதிகாரத்தைச் செலுத்த இப்போது அஞ்சுகின்றனர். உதாரணமாக, நம் மாகாண மந்திரி சபையில் முன்னமே இருந்துவந்த 13 மந்திரிகளுடன் மேலும் 2 பேரைச்

சேர்த்துக் கொள்வதற்கு அனுமதி பெற நமது பிரதமர் டெல்லிக்குச் சென்று வேண்டினார் என்று தெரிகிறது.

நம்முடைய நல்வாழ்வுக்கு வேண்டிய உடை, மண்ணெண்ணெய், உழவுக்கு வேண்டிய இரும்பு சாமான்கள், ரப்பர், காகிதம் முதலிய இன்றியமையாத பொருள்களைப் பெறுவதற்குக் கூட, டில்லி அதிகாரிகளின் தயவை எதிர் பார்த்து நிற்கவேண்டியவராக ஆகிவிட்டனர்.

அதுதான் போகட்டும் என்றாலும், வடநாட்டில் நடந்த சில அடாத செயல்களுக்காகத், தென்னாட்டில் வாழும் மக்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவும் தொடங்கிவிட்டனர். இது 'காசியில் தேள் கொட்டினால் ராமேஸ்வரத்தில் இருப்பவர்களுக்குக் குடையும்' என்று சொல்வதைப்போல நடந்துகொள்வதாகும். உதாரணமாக வடக்கே மாளவ நாட்டில் உள்ள ஒரு சங்கத்தினர் டொமினிட வர்க்கத்துக்கே அவமதிப்பை யுண்டாக்கும் ஒரு சதிச்செயலைச் செய்தனர். ஆகவே அந்நாட்டின் சர்க்கார் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பது முறை. அவர்கள் அப்படிச் செய்யத் தவறியதால், மத்திய இந்திய சர்க்கார் அதிகாரிகள் அச் சதியாளர்களைப் பிடித்துக் காவலில் வைத்து வழக்குத் தொடுத்தனர். அது மத்திய சர்க்காரின் கடமையே ஆகும்.

ஆனால் அக்காரணத்தைக் கொண்டு 1800 மைலுக்குத் தெற்கே, நம் நாட்டில் அமைதியாக இயங்கி வரும் அம் மாதிரியான சங்கங்களை எல்லாம் சட்டவிரோதமான சபைகள் என்று பிரகடனம் செய்து, அச்சங்கங்களின் உறுப்பினர்களைப் பிடித்துச் சிறையில் அடைப்பது முறை யாகுமா என்று கேட்கிறோம். அவ்வாறு நம் நாட்டு ஆட்சியாளர் நடந்ததற்குக் காரணம், நம் நாடு மத்திய

சர்க்காரோடு இரண்டற இணைந்திருக்கிறது என்பதைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும் ?

## ஆங்கில ஆட்சி

இதே மாதிரியாகத்தான் நம் நாட்டை முன்பு ஆண்டிருந்த ஆங்கிலேயர்களும் செய்து வந்தனர். உதாரணமாக, காங்கிரஸ் சபையின் மேலிடத்து அதிகாரிகள் சிலர் பம்பாயில் கூட்டம் கூடி, ஆங்கில சர்க்காருக்கு எதிராகச் சில தீர்மானங்களைச் செய்வார்கள். உடனே போலீஸ் அதிகாரிகள் அவர்களை அங்கேயே வளைத்துக்கொண்டு, பிடித்துச்சென்று சிறையிலடைத்து விட்டு, காங்கிரஸ் மகாசபையும், மாகாணங்களில் உள்ள அதன் கிளைகளும் சட்ட விரோதமான சபைகள் என்று பிரகடனம் செய்வார்கள். அதைக்கேட்டு பம்பாய்க்கு 800 மைலுக்கு இப்பால் உள்ள நமது மாகாண ஆங்கில சர்க்கார், நம் மாகாணத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்களை எல்லாம் பிடித்துச் சிறையில் அடைப்பர் ; அவர்கள் பம்பாய் கூட்டத்தில் கலந்துகொள்ளாதவர்கள் என்பதைக் கவனிப்பதேயில்லை.

அவர்களுடைய நாட்டுக்கு 6000 மைலுக்கு இப்பால் உள்ள இங்கே, அன்னியரான வெள்ளையர் ஆட்சி நடத்தினபோது, பயத்தின் காரணத்தால் மேல்சொன்னவாறெல்லாம் நடந்து கொண்டது இயற்கையே. நம் வீட்டில் உள்ள ஒருவரையும் கொட்டித் துன்புறுத்தாமல் போனாலும், தேளைக் கண்டவுடன் அதை நாம் அடித்துக் கொன்று விடுவதில்லையா ? பயத்தினால் அதேபோல வெள்ளைக்கார சர்க்காரும் நடந்தது. நம் நாட்டு மக்களால் ஆன சுதந்தர ஜனநாயக சர்க்காரும் அம்மாதிரியே நடந்தால், அதற்கும் அன்னிய வெள்ளை சர்க்காருக்கும் என்ன வித்தியாசம் ?

## அடிமை மனப்பான்மை

ஆங்கில ஆட்சியில் 1773 முதல் 150 வருஷத்துக்கு மேலாக டில்லியில் உள்ள அதிகாரிகளின் உத்தரவையும் தயவையும் எதிர்நோக்கி இருந்துவந்ததால், நம் மாகாணத்து மக்களுக்குள் ஒருவித அடிமை மனப்பான்மை குடி கொண்டுவிட்டது. அதனால் நம்மவர்கள் அயலாரையே பெரிய தலைவர்களாகக் கருதுகிறார்களே ஒழிய, நம் நாட்டினர், எவ்வளவு அறிவுடையவரா யிருப்பினும், திறமை யுள்ளவர்களா யிருப்பினும், அவர்களைப் பெரிய தலைவர்களாகக் கருதுவதில்லை; வடநாட்டினரால், உலகத்தினரால் போற்றப் படுபவர்களைக் கூட மதிப்பதில்லை. அயல் நாட்டுத் தலைவர்களைப் போற்றிப் பணிந்து அடங்கிக் கிடக்கும் அடிமை உணர்ச்சியை உடையவரா யிருக்கின்றனர். அவர்கள் முன் தலை நிமிர்ந்து நின்று தங்கள் நியாயமான உரிமைகளைப்பற்றி வாது செய்யவும் தயங்குகின்றனர். அத் தலைவர்களின் தயவைப் பெற்றுள்ள நம் நாட்டு முதலாளிகளுக்குக் கூடப் பணிபவர்களாக ஆகிவிட்டனர். நம் மக்களின் நன்மையைப் பாதிக்கக் கூடிய விஷயங்களில்கூட, அவர்களுடைய போக்கைக் கண்டிக்க முன் வருவதில்லை.

## அயலாரின் ஆதிக்கம்

நம்மிடமுள்ள இக்குறையைத் தெரிந்துகொண்டு, அயலார் நம் நாட்டில் குடியேறி, இங்குள்ள பல முக்கியமான பெருத்த தொழிற்சாலைகளையும், வியாபாரங்களையும் கைப்பற்றி நடத்திவருகின்றனர். இந்தியாவிலேயே முதல்முதலாக வர்த்தகக் கப்பல் ஒன்றை வாங்கிச், சுதேசி கப்பல் வியாபாரம் செய்த வ. உ. சிதம்பரம் பிள்ளை வாழ்ந்த நம் நாட்டில், 1000 மைலுக்கு அப்பால் வாழும் அயலாரே, விசாகப்பட்டினத்தில் கப்பல் கட்டும்

தொழிலையும், பெங்களூரில் விமானம் கட்டும் தொழிலையும் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள டால்மியா நகரில் சிமிட்டி செய்யும் தொழிற்சாலையையும் நடத்தி வருகிறார்கள். அவர்களைப்போன்ற நிதியும் செல்வாக்கும் படைத்த சீமான்களும் தொழில் நிபுணர்களும் நம் நாட்டில் இல்லாமலா போய்விட்டார்கள் ? பழங் காலத்தில் நம் பெரியோர்களிடம் இருந்துவந்த துணிவு மனப்பான்மையை (Spirit of Adventure) நம்மவர் இழந்து விட்டனர் என்பதே இவ்விழிநிலைக்குக் காரணமாகும்.

## நகரத்து செட்டிமார்கள்

பர்மாவிலும் மலேயாவிலும் நம் நாட்டு நாட்டுக் கோட்டைச் செட்டிமார் (நகரத்தார்) என்பவர்கள், தங்கள் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொண்டு வட்டிக் கடைகளை வைத்தும், நிலம் வாங்கிக் கூலியாட்களை வைத்துப் பயிர்செய்தும், பெருத்த வியாபாரங்களை நடத்தியும் வருகிறார்கள். பர்மாவில் மாத்திரம் அவர்களுக்குச் சொந்தமாக 30 லட்சம் ஏகர் நிலங்கள் இருப்பதாகவும், அவற்றின் மதிப்பு 90 கோடி ரூபாய் ஆகும் என்றும் தெரிகிறது. மலேயாவில் 2 லட்சம் ஏகர் நிலங்களும், 20 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களும் இருக்கிறதாம். ஆனால் நாட்டுப்பற்று தலைவிரித்தாடும் இக்காலத்தில், பர்மாவிலோ, மலேயாவிலோ, லங்கையிலோ, நம் நாட்டினருக்கு முன்னைப் போலச் சலுகைகள் காட்டப்படுவதில்லை. அவர்களுடைய நாடுகளில் இருந்த காடுகளை வெட்டியும், கரடுமுரடான நிலங்களைத் திருத்தியும், செழிப்புள்ள வயல்களாகவும் தோட்டங்களாகவும் செய்து வைத்தவர்கள் நாம். அதற்காக நாம் உழைத்த உழைப்பு, பட்ட கஷ்டங்கள், பறிகொடுத்த மானம், சிந்தின ரத்தம், செலவழித்த பணம், கொஞ்ச நஞ்சமல்ல. இவற்றை எல்லாம் அந்நாடுகளின் மக்கள்

மறந்துவிட்டனர். அங்குள்ள நம் நாட்டினருக்குப் பல விதமான தொல்லைகளைக் கொடுத்து வருகின்றனர். புதிய புதிய சட்டங்களை ஏற்படுத்தி நம்மவர்களை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

இங்கிலையில் உள்ள செட்டிமார்கள், இந்திய சர்க்கார் தலையிட்டு தங்களையும் தங்கள் சொத்துக்களையும் காப்பாற்றும் என்று நம்பி காலத்தை வீணாகக் கழித்து வருகிறார்கள். அதைவிட, இப்போதாவது தங்கள் நிலங்களையும் வியாபாரங்களையும் சுருட்டிக்கொண்டு, நம் நாட்டுக்குத் திரும்பிவந்து, இங்குள்ள விவசாயத்தைப் பெருக்கவும் புதிய தொழிற் சாலைகளைத் துவக்கவும் தங்கள் முதலீட்டை உதவி, இனியாவது தங்கள் தாய்நாட்டு நலனில் ஏன் அக்கரை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்கிறோம்.

நம் நாட்டுத் தங்கம், வெள்ளி நகை வியாபாரங்கள், இரும்பு, அலுமினியம் தொழிற்சாலைகள், ஜவுளிகள், ஓட்டல்கள், பத்திரிகைகள் முதலிய பல அடிப்படையான தொழில்களும் வியாபாரங்களும் நம்மால் நடத்தப்படுவதில்லை. நம் நாட்டைவிட்டு வெளியேறின வெள்ளையர் மூடிவிட்டுப்போன நெசவாலைகளையும் மற்ற தொழிற் சாலைகளையும் அயலாரே வாங்கிக் கொண்டு நடத்தி வருகின்றனர்.

## விடுதலை

மத்திய சர்க்காருடன் மிக நெருக்கமாக இணைந்திருப்பதால் (Union Type of Government) இம்மாதிரியான குறைகள் எல்லாம் ஏற்படுகிறது என்பதை உணர்ந்துதான் 1930 - ல் இங்கிலாந்தில் கூடிய இந்திய வட்டமேஜை மாநாட்டினர், இந்தியாவுக்குக் கூட்டாட்சி முறைதான் (Federal Type of Government) பொருத்தமானது என்ற முடிவுக்கு வந்தனர், மத்திய இந்திய சர்க்காரின்

அமைப்பு அவ்வாறு அமைந்திருந்தால், தற்காப்பு, வெளி நாட்டு உறவு, போக்குவரத்து, நாணய மடித்தல், நாணய மாற்று, கடல் சுங்கம் போன்ற சில விஷயங்கள் மாத்திரம் மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும். மற்ற வருமானவரி, நிலவருமானவரி, ஏற்றுமதிவரி முதலிய வருமானங்கள் எல்லாம் நம்மிடத்திலேயே இருந்திருக்கும். அப்பெரும் தொகைகளைக் கொண்டு நம் நாட்டு மக்களின் விருத்திக்கு வேண்டிய பல காரியங்களை மற்றவர்களின் உதவியை எதிர்பாராமல் நாமே செய்து கொள்ளலாம்.

## 2. பொருளாதாரம்

### கால்நடைகள்

நம் நாட்டில் விளையும், நமக்கு மிக அவசியமான சில பொருள்கள் நம் உபயோகத்துக்குக் கிடைக்காமலே, வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு விடுகின்றன. உதாரணமாக நம் நாட்டில் அதிகமாக பயிரிடப்படும் வேர்க்கடலையானது, வனஸ்பதி, டால்டா, டாப்பி (Toffee) முதலிய விலையுயர்ந்த பொருள்களைச் செய்வதற்காக வெளிநாட்டாரால் வாங்கப்பட்டு விடுகிறது. அதனால் உழவுத் தொழிலைப் பெரிதும் நம்பியுள்ள நம் நாட்டில், உழவுத் தொழிலுக்கு இன்றியமையாத மாடுகளுக்கு அவசியமான உணவாகிய கடலைப்பிண்ணுக்கு போதிய அளவுக்குக் கிடைக்காமல், மாடுகள் பலங்குன்றி மெலிந்து போகின்றன. இக் குறையை நீக்க வேர்க்கடலை ஏற்றுமதியைத் தடுக்கவேண்டும்; ஆனல் நம் மாகாண சர்க்காருக்கு அதற்கு வேண்டிய தடை உத்தரவு போடக்கூட அதிகாரம் இல்லை. அவ்வதிகாரம் மத்திய சர்க்காரின் கையில் கொடுக்கப்பட்டு விட்டது. மலையாளக் கரையிலும் மைசூர் நாட்டிலும் அபரிமிதமாக விளையும் மிளகு அவ்வளவும் மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகிவிடுவதால் நம்நாட்டுமக்களுக்கு கிடைப்பது மிக அருமையாகிவிட்டது.

### தேவைகள்

அதே போல, நம் நாட்டுப் பொருளாதார விருத்திக்கான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரமும், நம் மாகாண சர்க்காரின் வசத்தில் வைக்கப்படவில்லை. நமக்கு மிக அவசியமான தொழில் விருத்தி, கருப்பொருள் எடுத்தல், நீர்ப்பாசனம், கப்பல் கட்டுதல், படகுப் போக்குவரத்து, துறைமுகவிருத்தி, மின்சார உற்பத்தி முதலிய

பல விஷயங்கள் மத்திய சர்க்காரின் தனி அதிகாரத்தில் உள்ளன. ஆகவே அவ்விஷயங்களைப் பற்றி யாதொரு நடவடிக்கையும் நமது மாகாண சர்க்கார் எடுப்பதற் கில்லை. அதனால் நம் நாட்டு மக்களுடைய நலம் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

## உடை

உதாரணமாக, இக்காலத்தில் நம் நாட்டு மக்களுக்குப் போதிய துணிகள் அகப்படுவதில்லை. ஆனால் நம் நாட்டில் ஏராளமான பஞ்சு உற்பத்தியாகிறது. அப்பஞ்சிலிருந்து நூல் நூற்று, துணி நெய்துகொள்ள இன்னும் அதிகமான மில்களைத் திறக்கவோ, இருக்கும் மில்களில் அதிகமான தறிகளைச் சேர்க்கவோ நமது சர்க்காருக்கு அதிகாரம் இல்லை; டெல்லிக்கு விண்ணப்பம் செய்துவிட்டு, அவர் களுடைய உத்தரவை எதிர்பார்த்து நிற்கவேண்டி யிருக் கிறது.

## இரும்பு

நிலக்கரி அகப்படாத காரணத்தால் நம் நாட்டில் சேலம் ஜில்லாவில் அகப்படும் இரும்பை உருக்கிச் சாமான் களைச் செய்ய முடியவில்லை. தென்னார்க்காடு ஜில்லாவில் ஏராளமான பழுப்பு நிலக்கரியும் (Lignite) இரும்பும் பூமிக்கடியில் இருப்பதாக நிபுணர்கள் கண்டுபிடித்திருக் கிறார்கள். அவற்றை வெளியே கொண்டுவரச் சுரங்கங் களை வெட்டக்கூட நமது சர்க்காருக்கு உரிமையில்லை. அதனால் நம் நாட்டில் இரும்பு, எஃகு உற்பத்தி செய்யும் தொழில் பெரிதும் தடைப்பட்டிருக்கிறது.

## பெருத்த வருமானங்கள்

நம் நாட்டு மக்களின் நன்மைக்கும் விருத்திக்கும் ஆன பல விஷயங்களும், பெருத்த வருமானங்களைத் தரும்

முக்கியமான விஷயங்களும் மத்திய சர்க்காரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதனால் நம்முடைய திருப்திகரமான வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளைச் செய்ய நமது சர்க்காருக்கு முடிவதில்லை.

நம் நாட்டினரிடமிருந்து வருமானவரி ஏராளமாக வசூலிக்கப்படுகிறது. ஆனால் அதில் பெரும்பாகம் மத்திய சர்க்காருக்கு அனுப்பப்படவேண்டும். ஜமீன்தாரர்கள், மிராசுதாரர்கள் முதலியவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் நிலவருமான வரியும் அப்படியே. இப்பெரிய வருமானங்களின் தொகையாகிய சுமார் 60 கோடி ரூபாய் நமது சர்க்காருக்குச் சேராததால், நம் நாட்டின் பொருளாதார நிலைமை மிகத்தாழ்வானதாகவே இருக்கிறது என்று நமது நிதி மந்திரி திரு. கோபால் ரெட்டியார் அவர்களே சென்னை சட்டசபையில் பல முறை சொல்லியிருக்கிறார்.

## மற்ற வருமானங்கள்

மேற்கூறிய வரிகளைப்போல் பெருத்த வருமானத்தைக் கொடுக்கும் மற்ற விஷயங்கள் மிகச் சிலவே உள்ளன. அவற்றுள் விற்பனைவரி மூலம் 8 கோடி ரூபாய்தான் கிடைக்கிறது. அவ்வரி ஏழைகளை பாதிப்பதாக முன்னமே முறையீடுகள் வந்து கொண்டிருக்கின்றன; ஆகவே அவ்வரி விகிதத்தை உயர்த்தி வருமானத்தைப் பெருக்குவதற்கு வழியில்லை. அதற்கு அடுத்தாப்போல உள்ள பெரிய வருமானம் நிலவரியிலிருந்து வரும் 8 கோடி ரூபாய். இந்தியாவிலேயே, ஏன் உலகத்திலேயே கூட, நமது மாகாணத்தில் தான் நிலவரி விகிதம் அதிகம். நம் நாட்டுக் குடியானவர்களில் பெரும்பாலோர் முன்னமே தரித்திர நாராயணர்களாக உள்ளனர்; இப்போதே அவர்களுக்கு வரிப் பணத்தில் தள்ளுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. 5 ஏகருக்கு அதிகப்படாத நிலங்களை உடையவர்களுக்கு நிலவரியே விதிக்கப்படாதென்று சில பெரியோர்கள்

யோசனை சொல்லிக்கொண்டும் உள்ளனர். ஆகையால் வரிவிகிதத்தை உயர்த்தி இவ்வருமானத்தை அதிகமாக்கு வதற்கில்லை. இனி இவ்வரி விகிதம் குறைந்துகொண்டே போக வேண்டியும் வரும்.

முத்திரைகள் (Stamps), காடுகள் (Forests), பதிவு செய்தல் (Registration) முதலிய இலாக்காக்களிலிருந்து கிடைக்கும் வருமானங்கள் மிகச் சிறியவை.

மொத்தத்தில் இப்போது நமது சர்க்காருக்குக் கிடைக்கும் வருமானம் சுமார் 55 கோடி ரூபாய். இதில் ரூ. 30 கோடி சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கும் சிப்பந்திகளுக்கும் சம்பளம் கொடுக்கவே செலவாகிறது. மிகுதியுள்ள தொகையைக் கொண்டுதான், நாட்டு விருத்திக்கான கட்டாய இலவசக் கல்வி, சுகாதார வசதி, மருத்துவ வசதி, போலீஸ் முதலியவைகளை நடத்த வேண்டும். அவைகளைத் திருப்தியான முறையில் செய்ய நமது சர்க்காரிடம் போதிய பணம் இல்லாமல் போகிறது.

## மதுவிலக்கு

மதுவிலக்கு சம்பந்தமாக இந்தியாவில் உள்ள பல மாகாணங்கள் சும்மா இருந்தும், சில, பண்டித ஜவஹர்லால் நேருவின் யோசனைப்படி மெதுவாகச் சென்று கொண்டும் இருக்கும்போது, நமது மாகாண சர்க்கார் பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வந்தனர். அதன் பலனாய், மது விற்பனை மூலமாக நமது சர்க்காருக்குக் கிடைத்திருந்த 17 கோடி ரூபாய் வருமானம் மறைந்து விட்டது. குதிரை செத்ததும் அல்லாமல் குழித் தோண்டவும் பணம் வேண்டும் என்பதைப் போல, பாமர மக்கள் கள்ளத்தனமாக மது இறக்கி பானம் செய்வதைத் தடுக்க, அதிகமான போலீஸ் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டனர். மக்கள் மது அருந்துவதை மறக்கும்படிச் செய்ய, அவர்களுக்கு சடுகுடு முதலிய ஆட்டங்களைக்

கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். தேயிலைப் பானமும் ரொட்டித் துண்டும் அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கப்பட்டது; அதற்கு வேண்டிய ஆட்கள், அவ்வாட்களின் வேலையை மேல்பார்க்கும் உத்தியோகஸ்தர்கள், அவர்களுக்கு மேல் அதிகாரிகள் ஒவ்வொரு ஜில்லாவிலும் அமர்த்தப்பட்டனர். ஆகவே அதிகமாக அமர்த்தப்பட்ட போலீஸ்காரர், ஆசிரியர் முதலிய எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் சம்பளம் கொடுக்கவும், ரொட்டி, தேயிலைப்பானம் ஆகியவைகளுக்கு வேண்டிய செலவும், இவ்வளவு தடுப்பு ஏற்பாட்டுகளையும் மீறி மதுவருந்தும் குற்றவாளிகளைத் தண்டிக்க வழக்குத் தொடர்தல், தண்டிக்கப்பட்டவர்களைச் சிறையிலடைத்து உணவளித்தல் முதலிய காரியங்களுக்காக வேண்டிய செலவுகளுக்கும் போதிய தொகையை, மற்ற இலாக்காக்களின் வேலைகளை நிறுத்தியும், ஆட்களை நிறுத்தியும், சம்பளப் படிகளைக் குறைத்தும் தான் அடையவேண்டி இருக்கிறது.

## உதவி இல்லாமை

மத்திய சர்க்காராவது நமது சர்க்காருக்குப் பொருள் உதவி செய்ய முன் வருவார்களா? அவர்கள் அதற்குத் தகுந்த நிலைமையில் இல்லை. இந்தியாவுக்கு சுதந்தரம் வந்தபின்னர், மற்ற நாடுகளைப்போல் கவுரவமாக மதிக்கப்பட வேண்டி, அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான், ஈரான், சைனு முதலிய செல்வாக்குள்ள வெளி நாடுகளில் 18 அரசியல் தூதர்களை (Ambassadors) நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. அவர்களுக்கு மாதாமாதம் சராசரியில் 10000 ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. மேலும் அவர்களுடைய வாகனம், விருந்து, அவர்கள் தங்கி வேலைப் பார்க்கும் காரியாலயங்கள், அவற்றின் மரச்சாமான்கள், மின்சார விளக்குகள், ரத்தின ஜமக்காளங்கள் முதலிய

வைகளுக்காக ஆண்டொன்றுக்கு 2 லட்சம் ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. பொக்கிஷ நிலைமையில் நெருக்கடி ஏற்பட்ட காரணத்தால், தங்கள் தூதர்களின் சம்பளங்களையும் பிரயாணப்படிகளையும் குறைக்கவேண்டுமென்று இப்போது தான் மத்திய சர்க்கார் யோசித்து வருகின்றனர்.

போதாக்குறைச்சலுக்கு காஷ்மீர் யுத்தத்தில் இந்திய யூனியன் அதிகாரிகள் கலந்து கொண்டதால், அதற்காக நாள் ஒன்றுக்கு லட்சக்கணக்கில் ரூபாய் செலவாகிறது. ஆகவே மத்திய சர்க்காரிடமிருந்து நாம் யாதொரு பெரிய உதவியையும் எதிர்ப்பார்ப்பதற்கில்லை.

## சலுகை இன்மை

பண உதவிதான் செய்ய முடியவில்லை என்றாலும், மற்ற வழிகளில்கூட மத்திய சர்க்கார் நமக்கு சலுகை ஒன்றும் காட்டுவதில்லை என்று, நம் நாட்டுத் தொழிற்சாலை நிபுணரான தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் 8-6-1947 ல் இந்திய சர்க்காரைச் சேர்ந்த நிர்வாகிகள் சிலருக்குக் கோவையில் விருந்தளித்தபோது பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறார். வால்வுகளைத் (Valves) தவிர்த்த மற்ற ரேடியோ பாகங்கள் அனைத்தும், எலெக்டிரிக் மோட்டார்களும் தயாரிக்கும் தனது யு. எம். எஸ். தொழிற்சாலைக்கு, அதுவரை ஓர் அங்குல இரும்புத் துண்டோ, செப்புக்கம்பியோ மத்திய சர்க்கார் கொடுத்ததில்லை ; செப்புக் கம்பியை வெளியில் வாங்க அனுமதி தரவும் இல்லை என்று சொன்னார்.

1936 - ல் தன்னால் தயாரிக்கப்பட்ட ரேஸர் பிளேடுகள் (Razor Blades) சென்னைப்பட்டினத்திலும் செல்வாக்குப் பெற்று, ஜெர்மனியிலும் முதல் பரிசு பெற்றன வென்றும், அம்மாதிரியான பிளேடுகளை லட்சக்கணக்கில் சப்ளை செய்யும்படி அமெரிக்காவிலிருந்து தனக்கு வந்த

ஆர்டரை, மத்திய சர்க்கார் எஃகு கொடுக்காததால் பூர்த்திசெய்ய முடியவில்லையென்றும், மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்படும் தேசிய விஞ்ஞான ஆராய்ச்சி சாலைகள் எதுவும் இம் மாகாணத்தில் நிறுவப்படுவதில்லையென்றும், சென்னை சர்க்காரும் நாட்டுப் பொதுமக்களும் சும்மா யிருந்துவிட்டால், வாழ்க்கைத்துறைகள் ஒவ்வொன்றிலும் நாம் பிற்போக்கிலேயே இருக்கவேண்டி நேரிடும் என்றும் எச்சரித்தார்.

## ஆட்சியினரின் அவஸ்தை

நம் நாட்டு விருத்திக்கான விஷயங்களில் மத்திய சர்க்கார் உதவி செய்வதற்கு இயலாமல் போனாலும், நாட்டு நடப்பு விஷயங்களில் நெருக்கடி நேரிடும்போது கூடத் தங்கள் அதிகாரத்தைச் சிறிதும் தளர்த்துவதில்லை. உதாரணமாக இப்போது நம் நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியைத் தீர்க்க, மிராஸ்தாரர்களிடமிருந்தும் குடியானவர்களிடமிருந்தும் நெல் முதலிய தானியங்களை அதிக அளவில் வாங்க மாகாண சர்க்கார் முயன்றனர். அவர்கள் கொடுக்க வேண்டிய கொள்விலை வீதத்தை மத்திய சர்க்காரே நிர்ணயித்தனர். ஆனால் அது மிகக் குறைவான விலையென்று கருதி குடியானவர்கள் தங்கள் வசமிருந்த தானியங்களை சர்க்காருக்கு விற்க மறுத்து விட்டனர். குடியானவர்களின் முடிவு நியாயமானதெனக் கருதி, மாகாண சர்க்கார் கொள்விலையைச் சிறிது உயர்த்தும்படி மத்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டனர்; ஆனால் அவ்வேண்டுகோள் மறுக்கப்பட்டது. ஆகவே பங்கீட்டுக்கு வேண்டிய நெல் கிடைக்கவில்லை என்று நம் பிரதமரே சட்டசபையில் பிரலாபிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மேற்கூறியது போன்ற பல விஷயங்களைப் பற்றிக் கலந்து ஆலோசிக்கவும் அனுமதிபெறவும் அடிக்கடி நமது

மாகாண மந்திரிகள் டில்லிக்குப் போக வேண்டியிருக்கிறது. அதற்காக 3½ லட்சம் ரூபாய் கொடுத்து மணிக்கு 200 மைல் வீதம் போகக் கூடிய ஹனுமான் என்ற ஓர் ஆகாய விமானத்தையும் வாங்கி யிருக்கிறார்கள். அதில் ஏறிக்கொண்டு டில்லிக்குப் போய்வர ஒவ்வொரு முறையும் ரூ. 500-க்குக் குறையாமல் செலவாகிறது.

## உண்மையான விடுதலை

ஆகவே நாம், நம் நாட்டு நன்மைக்காகவும், விருத்திக்காகவும் உபயோகப்படுத்த வேண்டிய அதிகாரத்தையெல்லாம் மத்திய சர்க்காரிடம் ஒப்படைத்துவிட்டு இப்படி அவஸ்தைப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். அவ்வளவு அதிகாரங்களையும் தங்கள் வசம் வைத்துள்ள மத்திய சர்க்காரும் நமக்குப் போதிய உதவியைச் செய்ய முடிவதில்லை. கால்வயிறு சாப்பிடும் ஒருவனுடைய வாழ்க்கை எவ்வளவு காலந்தான் நீடித்திருக்கும்? அதனால் தான் சர். ஏ. டி. பன்னீர்செல்வம், பெரியார் ஈ. வெ. ராமசாமி போன்ற பெரியோர்கள் திராவிடநாட்டைத் தனி நாடாகச் செய்துவிட வேண்டும் என்று கோருகின்றனர். அப்போது தான் நம் நாட்டு மக்களுக்கு வேண்டிய நடவடிக்கைகளை எல்லாம் நாமே எடுத்துக் கொள்ள முடியும் ; மத்திய சர்க்காரின் உத்தரவை நோக்கியோ, பிறரை நம்பியோ இருக்க வேண்டியதில்லை. இது தான் 'திராவிடநாடு பிரிய வேண்டும்' என்பதன் பொருளும் ஆகும்.

மத்திய சர்க்காரிடம் ஒப்புவிக்கப்பட்ட விஷயங்களில், போக்குவரத்து, தபால், தந்தி, தற்காப்பு, வெளி நாடு சம்பந்தம், நாணய மடித்தல், நாணய மாற்று ஆகிய விஷயங்கள் தவிர மற்றவை எல்லாம் நமது மாகாண சர்க்காருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். ஏற்று மதிவரி, வருமானவரி முதலிய வரிகளிலிருந்து இப்போது

கொடுப்பது போல மொத்தத்தில் 60 கோடி ரூபாய் மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் அப்போது இருக்காது. நமது சர்க்காரிடமும் 120 கோடி ரூபாய் வருமானம் இருக்கும். அப்பெரு நிதியைக் கொண்டு நாட்டின் விருத்திக்கான பல காரியங்களைச் செய்து கொள்ளலாம்.

1947 ஆகஸ்டு 15 - ல் நமக்கு வந்த சுதந்தரம் வெறும் அரசியல் சுதந்தரம் என்றும், மற்றபடி பொருளாதார சமுதாய சுதந்தரங்கள் இன்னும் வரவில்லை யென்றும், அவைகளைப் பெற்ற பின்பு தான் இந்திய மக்கள் சமாதானத்துடன் திருப்தியுடன் நல்வாழ்வு வாழ முடியும் என்றும் காந்தியாரே சொல்லிவிட்டுப் போனார். அம்மாதிரியான உண்மைச் சுதந்தரத்தை அடைந்து நாம் நல்வாழ்வு வாழ மத்திய சர்க்காரின் ஆதிக்கம் குறைந்து, மாகாண சர்க்காரின் அதிகாரம் உயர வேண்டும்.

## தீக்குச்சி உற்பத்தி

இதற்குச் சில உதாரணங்களைத் தருகிறோம். முதலாவதாக, நம் நாட்டில் தீக்குச்சி உற்பத்தி பெருத்த அளவில் இப்போது நடைபெற்று வருகிறது; என்றாலும் இன்னும் குடிசைத் தொழிலாகவே இருந்து வருகிறது. 1923-லேயே இத் தொழில் வர்த்தக முறைக்கு ஏற்ற நிலையில், நம் நாட்டின் பல பாகங்களில் துவக்கப்பட்டது. இப்போது அம்மாதிரியான உற்பத்தி சாலைகள் நம் மாகாணத்தில் 190 உள்ளன. மலையாளத்தில், கம்பிளி, பாலை, மட்டை, ஒலவமரம் முதலானவைகளைப் பண்படுத்தி தீக்குச்சியாகவும், பெட்டி செட்டாகவும் தயார் செய்யும் தொழிற்சாலைகள் 60 உள்ளன. தீப்பெட்டி லேபில்கள் தயாரிக்க மேல் நாட்டுக்குச் சமமான உயர்தர வித்தோ தொழிற்சாலைகள் 60 உள்ளன. கழிவு காகிதம், குப்பை முதலியவைகளைக் கொண்டு தீப்பெட்டியை ஒட்டுவதற்கு வேண்டிய காகிதங்கள் செய்ய, திருவாங்கூரில் உள்ள

புனலூரிலும், ஆந்திரப் பகுதிகளிலும் பல தொழிற் சாலைகள் துவக்கப்பட்டுள்ளன. வச்சிரம், பசைமாவு முதலியவை வாணியம்பாடி, குப்பம் என்ற ஊர்களில் ஏராளமாகத் தயாரிக்கப்படுகின்றன. இவ்வளவு முற் போக்கான முறைகளில், யாதொருகுறையுமின்றி, பெருத்த அளவில் நம் நாட்டில் தயாரிக்கப்படும் தீக்குச்சிகளில் ஒரு சிறு பகுதியையே நாம் உபயோகிக்கிறோம். மிகுதியா யுள்ள பெரும் பகுதியை வெளி நாடுகளுக்கு அனுப்பினால், நல்ல விலைக்கு விற்று அதிக லாபம் அடையலாம்.

ஆனால் இது மத்திய சர்க்காரைச் சேர்ந்த விஷயம். வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு அந்த சர்க்காரின் அனுமதி கிடையாது. ஆகையால் அவைகளை வட நாட்டினருக்குத் தான் விற்று ஆக வேண்டும். இந்த சங்கடத்தைத் தெரிந்து கொண்டு வடவர்கள் மிகக் குறைந்த விலைக்கே நமது தீப்பெட்டிகளை வாங்குகின்றனர். அதனால் நமக்குப் போதிய லாபம் கிடைப்பதில்லை. தொழிலாளர்களுக்குக் குறைந்த கூலிதான் கொடுக்க முடிகிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ள 50 ஆயிரம் தொழிலாளர்கள் போதிய சம்பளம் இன்றித் தவிக் கின்றனர்.

மேலும் இந்த சரக்கின் மீது விதித்துள்ள வரியி லிருந்து, மத்திய சர்க்காருக்கு ஆண்டுதோறும் $1\frac{1}{4}$ கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

திராவிடம் தனிநாடாக இருந்தால், உபரியாயுள்ள நமது தீப்பெட்டிகளை வெளி நாடுகளுக்கு அனுப்பி பெருத்த லாபம் அடையலாம். அதனால் தொழிலாளர் களின் சம்பளமும் உயரும். இப்போது மத்திய சர்க்காருக் குக் கொடுக்கப்பட்டுவரும் $1\frac{1}{4}$ கோடிரூபாயும் நமது சர்க் காருக்குச் சேர்ந்து, நம்முடைய நல்வாழ்வுக்குப் பயன் படும். நமது மாகாண சர்க்காரும் யந்திரத் தொழிற்சாலை களுடன் போட்டிபோட முடியாத இக் குடிசைத் தொழி

லுக்கு உதவியாக, தீப்பெட்டிகளை ரயிலில் கொண்டு போகக் கட்டணம் குறைவு, விற்பனைவரி குறைத்தல், அத்தொழிலுக்கு வேண்டிய ரசாயனப் பொருள்களையும் பூரிமரம் முதலியவைகளையும் மலிவாக வாங்கும்படிச் செய்தல் முதலிய சலுகைகளைச் செய்து கொடுக்கலாம்.

### கோதுமை

இன்னொரு உதாரணம்: நம் உணவுக்காக அவசியம் வேண்டிய பொருள்களில் கோதுமை முக்கியமானது. இது நம் நாட்டில் போதிய அளவு பயிராக வில்லை. ஆகையால், ஆஸ்திரேலியா, கானடா, பாகிஸ்தான் முதலிய நாடுகளிலிருந்து இப்போது தருவிக்கப்படுகிறது.

நம் நாட்டில் நீலகிரி, கோயமுத்தூர் ஜில்லாக்களில், கோதுமை சிறிதளவு பயிர் செய்யப்பட்டு வருகிறது. அப்பயிரை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் இன்னும் எங்கெங்கே கோதுமையைப் பயிர்செய்ய முடியும் என்று தெரிந்து சொல்ல, நமது சர்க்கார் நிபுணர்களை அமர்த்தியும் இருக்கின்றனர். இவ்வாறு கோதுமைப் பயிரை விருத்தி செய்ய நமது மாகாண சர்க்கார் முயலும் போது, இன்னும் 3 ஆண்டுகட்கு நம் நாட்டில் கோதுமையோ, வார்கோதுமையோ பயிர் செய்யக்கூடாது என்று மத்திய சர்க்காரிடமிருந்து தடை யுத்தரவு வந்திருக்கிறது. நமது மாகாணத்தில் கோதுமை பயிர் செய்வதால், மத்திய மாகாணத்திலும் ஐக்கிய மாகாணத்திலும் பயிர் செய்யப்படும் கோதுமை க்ஷீணித்துப் போய் அதனால் 20 லட்சம் டன் அளவுக்கு மாசூல் குறைந்து போகிறதாம். இவ்வுத்தரவால் நம் நாட்டில் சுமார் 3000 ஏகர் நிலங்களில் கோதுமை பயிர் செய்வது நின்றுவிட்டது. பயிர்செய்வதை நிறுத்திவிட்டதால், அந்நிலங்களின் சொந்தக்காரர்களுக்கு, மத்திய சர்க்கார் ஏதோ நஷ்டஈடு அளிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தபோதிலும்

நம் நாட்டில் கோதுமைப் பயிரை விருத்தி செய்யும் ஆக்க வேலை தடைப்பட்டு நிற்கிறது. திராவிடம் தனித்திருந்தால், நம் மக்களின் நன்மைக்காக நமது சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சி இவ்வாறு முடிந்துவிடுமா என்று கேட்கிறோம்.

மேலும் நாம் எதற்கெடுத்தாலும் டில்லியை நோக்கி நிற்கும் நிலை மாறவேண்டும். நம் நாட்டைப் பற்றிய விஷயங்களை நாமே, பிறருடைய தலையீடின்றி நிர்வகிக்கும் உரிமை வேண்டும். அப்போதுதான் நமக்குக் கிடைத்த சுதந்தரம், நம் மக்களின் நல்வாழ்வுக்கு உதவியாயிருக்கும். நாம், சுகமாக, பெருமையாக, தைரியமாக வாழ்ந்தால் தான், வெளிநாட்டாரும் நம்மை மதிப்பர்; நம் நாட்டில் வந்து கூடார மடித்துக் கொண்டு, நம்மைச் சுரண்டிப் பெற்ற பொருளைத் தங்களுடைய நாடுகளுக்கு அனுப்பி வைக்கும் தீய வழக்கத்தையும் கைவிடுவர். நாம் அவர்களுடைய நாடுகளுக்குப் போனால், நம்மை மதித்து மரியாதையும் செய்வர். ஆகவே திராவிட மக்கள் எல்லாரும் கட்சிப் பேதமின்றி ஒன்று சேர்ந்து, நம் நாட்டின் உண்மையான விடுதலையை நாடவேண்டும்.

# 3. அவசரமான சீர்திருத்தங்கள்

அரசியலில் திராவிடநாடு தனிச் சுதந்தர நாடாக ஆனபின் நம் நாட்டு ஆட்சியினர் அவசரம் அவசரமாகப் பல துறைகளில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களையும் ஏற்பாடுகளையும் பற்றிய யோசனைகளை இத்தலைப்பின் கீழ்க் குறிக்கிறோம்.

## சமுதாய இழிவுகள்

மக்களிடையே இப்போதுள்ள ஒற்றுமை இன்மை, பிணக்குகள் முதலிய பல குறைகளுக்குக் காரணம் சாதி பாகுபாடுகள். ஆகவே சாதி வேற்றுமைகளைக் களைந்தெறிவதற்கு மிக பரப்பரப்புடன் பணிசெய்ய வேண்டும். இதுவே முதல் முதலில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தம். சாதி வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டுள்ள சட்டங்கள், சாஸ்திரங்கள், சம்பிரதாயங்கள், பழக்க வழக்கங்கள் ஆகியவைகளை அடியோடு ஒழித்துவிட்டு, சாதி பாகுபாட்டையே குறிக்காத புதிய சட்டங்களை இயற்ற வேண்டும். சாதி சம்பந்தமாக எவ்விதமான குறையும், தாழ்வும், இழிவும், அவமதிப்பும் நம் நாட்டில் ஒருவருக்கும் இருக்கக் கூடாது.

## மத பேதங்கள்

மத விஷயங்களிலும் அப்படியே. மதத்தின் காரணத்தால் எவரும் எவ்வித தடை, அவமதிப்பு, குறைவுக்கும் ஆளாகாதபடி சட்டம் செய்ய வேண்டும். எக் கோயில்களிலும் எல்லாரும் சமமாகப் பாவிக்கப்பட வேண்டும். எவ்வளவு பழைய வழக்கமானாலும், பழக்கமானாலும் இச் சமத்துவத்துக்குத் தடையாக இருக்கும்படி விடக் கூடாது. அப்பேர்ப்பட்டவைகளை சட்டமூலமாகவே களைந்தெறிந்து விட்டு, இறைவன் திரு முன்னே எல்லாரும்

சமம் என்பதை விளக்கி மக்களிடத்தில் பிரசாரம் செய்ய வேண்டும்.

## புதிய விவசாய முறைகள்

மக்களின் நல்வாழ்வுக்கான முக்கியமான விஷயம் விவசாய விருத்தியாகும். யந்திரக் கலப்பைகள், நீரிறைக்கும் யந்திரங்கள் (Water Pumps) முதலிய யந்திர உதவிகளைக் கொண்டு நம் நாட்டினர் பயிர் செய்யும்படிச் செய்யவேண்டும். கரும்பு, புகையிலை, பருத்தி, கம்பளம், உப்பு ஆகியவைகளின் தரத்தையும் உயர்த்த வழிகாண வேண்டும். அரிசி, கோதுமை, சணல் முதலியவைகளின் உற்பத்தியையும் பெருக்கவேண்டும்.

ஆறுகளின் நீரை மேலும் பலவிடங்களில் மடக்கி, அணைகளைக் கட்டி, மின்சாரத்தை ஏராளமாக உற்பத்தி செய்து, அம் மின்சாரத்தைக் கொண்டு, ஆற்றுக்குத் தொலைவான இடங்களில் உள்ள வயல்களில் நீரிறைக்கும் யந்திரங்களை இயக்கி, நீர்ப்பாய்ச்ச வேண்டும். அம் மின் மனைகளில் ஏற்படும் கழிவு நீரையும் கால்வாய்களில் செலுத்தித் தொலைதூரத்தில் உள்ள நிலங்களுக்குப் பாய்ச்சி விவசாயத்தைப் பெருக்கலாம்.

## கிராம முன்னேற்றம்

அதோடுகூட கிராம மக்கள் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் உடனே செய்து வைக்கவேண்டும். நம் நாடு கிராமங்கள் பெருத்த நாடு. ஆகையால் ஒவ்வொரு கிராமத்துக்கும் மிக அவசியமாக வேண்டிய வசதிகள் முதலில் செய்யப்படவேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒன்றிரண்டு சுத்தமாக வைக்கப்படும் குடித் தண்ணீர் கிணறு அல்லது குளம், மருத்துவ நிலையம் (Dispensary)

பள்ளிக்கூடம், புத்தக நிலையம், ஆரம்பப் பள்ளி, சமூகப் பள்ளி, கூட்ட மண்டபம், தபால் ஆபீசு, போலீஸ் ஸ்டேஷன் ஆகியவை மிக மிக அவசியம். நாலைந்து கிராமங்கள் சேர்ந்து 5000 ஜனத்தொகையுள்ள தொகுதிக்கு ஒரு கிராம பரிபாலன சபை, பஞ்சாயத்து கோர்ட்டு, சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டு, அந்த தாலுகாவின் விளை பொருள்களைப் பொதுமக்கள் வாங்குவதற்காக சேகரித்து வைக்கப்படும் ஸ்டோர், நவீன விவசாய முறைகளைக் கற்றுக் கொடுக்க ஒரு மாதிரி விவசாயப் பண்ணை, நெல் மிஷின், மாவு மிஷின் ஆகியவைகள் அமைக்கப்படவேண்டும்.

கிராமங்களிலிருந்து தாலுக்கா தலை நகருக்குப் போக நல்ல வண்டிப் பாதைகள் அமைக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பெரிய கல்வி இன்ஸ்பெக்டர், ஒரு செஷன்ஸ் ஜட்ஜ், ஒரு சிவில் ஜட்ஜ், ஒரு கூட்டுறவு பாங்கு, ஜில்லாவின் தலை நகரில் பெரிய ரயில்வே ஸ்டேஷன், பெண்களுக்கும் ஆண்களுக்கும் கல்லூரிகள், போதனுமுறைக் கல்லூரிகள், விவசாயக் கல்லூரிகள், தொழில்முறைக் கல்லூரிகள், மாதிரித் தொழிற் சாலைகள், போலீஸ் சூபரெண்டு முதலிய பெரிய உத்தியோகஸ்தர்களின் பணி மனைகள் அமைக்கப்படவேண்டும்.

## உள்நாட்டு வியாபார வசதிகள்

கிராமங்களில் விளையும் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அனுப்புவதற்காக ரயில்வே ஸ்டேஷன்களில் போதிய வசதிகள் செய்துவைக்கப்பட வேண்டும். சரக்கு மூட்டைகளைப் பத்திரமாக அடுக்கி வைக்க ஒவ்வொரு தாலுக்கா ரயில் ஸ்டேஷனிலும், எல்லாப் பருவங்களுக்கும் ஏற்ற மாதிரியில் சாமான் கொட்டகைகள் (Goods Shed) அமைக்கப்படவேண்டும். அச் சரக்குகளை ஏற்றிச் செல்லும் வாகன்கள் (Wagons)

மழைக் காலத்தில் சரக்குகளுக்கு யாதொரு கெடுதியும் நேராத வகையில் செய்து வைக்கப்படவேண்டும். ரயில் அதிகாரிகள் கிராம வாசிகளுக்கு வேண்டிய எல்லா விதமான உதவிகளையும் அன்போடு தாங்களே உவந்து அளிக்கும்படிச் செய்யவேண்டும்.

மேலும் நமது நாட்டின் பற்பல பாகங்களில் உற்பத்தியாகும் பொருள்களை, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு, வியாபாரத்துக்காகக் கொண்டு போவதற்கு ரயில் வசதிகள் மாத்திரம் போதாது. கடற்கரை யோரங்களில் உள்ள பட்டினங்களுக்கு இடையே, கடற்கரையோரமாகவும், மேற்குக் கரையில் உள்ள உப்பங் கழிகள் மூலமாகவும், கிழக்குக் கரையில் உள்ள பக்கிங்காம் கால்வாய் மூலமாகவும் வியாபாரம் நடத்தவேண்டிய ஏற்பாடுகளைச் சர்க்காரே செய்துவைக்கவேண்டும். அவ்வியாபாரத்துக்கு உதவியாக, சர்க்காரே பெரிய படகுகளையும், யந்திரப் படகுகளையும் (Steam Boats), சிறிய கப்பல்களையும் கட்டிவைக்கவேண்டும். கடற்கரை யோரங்களில் குப்பங்கள் என்ற சிறு கிராமங்களில் வாழும் பல்லாயிரக் கணக்கான திரையர்கள் என்போர், இத் தொழிலை நடத்துவதில் சர்க்காருக்குப் பேருதவியாக இருப்பார்கள்.

## பெருத்த வியாபாரங்கள்

அடுத்ததாற்போல் கவனிக்கபடவேண்டியது நம் நாட்டில் உள்ள பெரிய பட்டணங்களில் நடத்தப்படும் பெரிய வியாபாரங்கள் ஆகும். அவைகள் பெரும்பாலும் வெளிநாட்டினரால் நடத்தப்படுகின்றன. அவர்களைத் திடீரென்று அவ் வியாபாரங்களை விட்டு வெளியேறும்படிச் சொல்வது நியாயமு மாகாது; நமது தற்காலப் பொருளாதார நிலைக்கு ஏற்ற அறிவுடைய செயலும் ஆகாது. ஆதலால் நம் நாட்டு முதலாளிகளும் அவற்றின் மூலதனத்தில் பங்கு எடுத்துக்கொள்ளும்படிச்

செய்யவேண்டும். குறைந்தது ரூ. 1000 முதலாக வைத்து அயலார் நம் நாட்டில் நடத்தும் வியாபாரம் ஒவ்வொன்றின் மூலதனத்திலும் குறைந்தது அரைப் பங்கும், அந்த ஸ்தாபனங்களில் உள்ள ஊழியத்தில் முக்கால் பங்கும் நம் நாட்டாருடையதாக இருக்கும்படி உத்தர விடவேண்டும். அப்படி மூலதனத்தில் பங்கெடுக்க நம் நாட்டினரில் போதியவர் முன் வராவிட்டால், அப் பங்குகளைச் சர்க்காரே ஏற்றுக் கொள்ளவேண்டும். மொத்த லாபத்திலும் அரைப் பங்கை ஊழியர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும்படிச் செய்யவேண்டும். அப்போது நம் நாட்டில் வெளி நாட்டினரால் நடத்தப்படும் தங்கம், இரும்பு, அலுமினியம், ஓட்டல், பத்திரிகைகள் எல்லாவற்றிலும் நம் நாட்டார் அரைப் பங்கு பாத்தியதை உள்ளவர்கள் ஆகிவிடுவார்கள்.

## தொழில் விருத்தி

நம் நாட்டில் இப்போதுள்ள அநேகமாக எல்லாப் பெரிய தொழிற்சாலைகளும் அயலாரின் கையிலேயே இருக்கின்றன. பெருத்த வியாபாரங்களில் இருப்பது போலவே, 1000 ரூபாய்க்குக் குறையாமல் முதல்வைத்து நடத்தும் தொழிற்சாலைகளில் எல்லாம், அரைப் பங்கு மூலதனம் நம் நாட்டாருடையதாக அல்லது நம் சர்க்காருடையதாக இருக்கும்படிச் செய்யவேண்டும். அத் தொழிற் சாலைகளில் வேலை செய்வோரும் முக்கால் பங்கு நம் நாட்டவராகவே இருக்கவேண்டும். அவற்றின் நிர்வாகக் கமிட்டிகளில், முக்கால் பங்கு உறுப்பினர்கள் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக இருக்கும்படிச் செய்யவேண்டும்.

### புதிய தொழிற்சாலைகள்

நம் நாட்டினர் புதிய தொழிற்சாலைகளை அமைக்க விரும்பினால், அவர்களுக்குச் சர்க்கார் சிறிதளவு பொரு

ளுதவி செய்வதோடு, நம்மாலான வசதிகளை எல்லாம் செய்து கொடுத்து ஊக்கம் அளிக்கவேண்டும். அத் தொழிற்சாலைகளைக் கண்காணிக்கவும், நவீன முறைகளைக் கற்றுக்கொடுக்கவும் நிபுணர்களை அமர்த்தி, தொழில் விருத்திக்காகவே ஓர் இலாக்காவை ஏற்படுத்தவேண்டும்.

வெளிநாட்டினர் நம் நாட்டில் புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த முன்வந்தால், அவர்களுக்கும் நமது சர்க்கார் பொருளுதவியைத் தவிர மற்ற எல்லா சலுகைகளையும் தரலாம்; ஆனால் அச்சாலைகளின் மூலதனம் மேல்சொன்ன திட்டங்களுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்தால், நன்றாய்ப் பாடுபட்டு உழைக்கக் கூடிய நம் மக்கள், நம் நாட்டில் பிழைக்க வழியின்றி, மலேயா, ஜாவா, மோரீஸ், பிஜி, பர்மா முதலிய விடங்களுக்குச் சென்று கூலிவேலை செய்து, அந்நாட்டு மக்களோடும் சர்க்காரோடும் சச்சரவு வைத்துக்கொண்டு அல்லல்படுவது நின்றுபோய்விடும். வெளி நாடுகளில் இப்போது வாழ்ந்துவரும் நம் நாட்டினர் எல்லாம் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்துவிடுவர்.

பெரிய வியாபார ஸ்தலங்களையோ தொழிற்சாலைகளையோ நடத்தி வருபவர்கள், எவ்வித காரணத்தினாலும் ஒரு மாத காலத்துக்கு மேல் அவைகளை மூடிவைத்து, அவற்றின் தொழிலாளர்களுக்கு வேலைகொடுக்காம லிருந்தால், உற்பத்திப் பெருக்கம் தடைப்பட்டு நெருக்கடியும் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்கு கேடும் உண்டாகும் என்ற காரணத்தால், அவைகளைச் சர்க்காரே ஏற்றுக் கொண்டு நடத்தவேண்டும்.

### சர்க்கார் தொழிற்சாலைகள்

நமக்கு இன்றியமையாது வேண்டப்படும் சில பொருள்கள் நம் நாட்டில் மிகச் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆகவே அவைகளுக்காக மற்ற

நாடுகளை நாம் எதிர்பார்த்த வண்ணம் இருக்கவேண்டி யிருக்கிறது. இவற்றுள் காகிதம், இரும்பு, ஆயுதங்கள், சணல் ஆலைகள் மிக முக்கியமானவை.

ஆந்திர நாட்டில் இப்போது சர்க்காரால் நடத்தப் பட்டுவரும் காகிதத் தொழிற் சாலையைப் போல, பல காகிதத் தொழிற்சாலைகளை நாடெங்கும் ஏற்படுத்த வேண்டும். இரும்பு ஆயுதங்கள் செய்யப்படும் தொழிற் சாலைகள் பல வட நாட்டில் கடந்த போர்க்காலத்தில் ஏற்படுத்தப்பட்டன. அதே மாதிரியான பல தொழிற் சாலைகளை நம் நாட்டிலும் ஏற்படுத்தவேண்டும்.

கந்தகத் திராவகம் போன்ற முக்கியமான ரசாயனப் பொருள்களையும், குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும் அவசியம் வேண்டிய கஞ்சிச்சத்து (Yeast) போன்ற சத்துப் பொருள்களையும் (Vitamins) பெருத்த அளவில் செய்வதற்கு தொழிற் சாலைகள் ஏற்படுத்தலாம்.

## ஆராய்ச்சிகள்

### இரும்பு

பூமிக்குள் பதுங்கிக் கிடக்கும் கருப்பொருள்கள் நம் நாட்டில் அதிகம். அவற்றுள் மிக முக்கியமானது இரும்பு. சாத்தூர், மைசூர் சமஸ்தானங்களிலும், கோய முத்தூர், சேலம் ஜில்லாக்களிலும் இரும்பு மண் ஏராள மாகக் கிடைக்கிறது. சேலம், திருச்சி, கர்னூல் ஜில்லாக் களில் மாத்திரம் 67 கோடி டன் இரும்பு மண் கிடைக்கும் என்று சில வைப்பு நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்ற னர். அவ் விரும்பை எஃகாக மாற்றினால், அதைக் கொண்டு நம் நாட்டு உழவர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேண்டிய பலவித இரும்பு சாமான்களை நாமே செய்து கொள்ளலாம்.

இரும்பை உருக்கி எஃகாக மாற்றுவதற்கு வேண்டிய சுண்ணாம்புக் கல்லும், டாலமைட் என்பதும், கிருஷ்ணு,

கர்னூல், சேலம், திருச்சி, கோயமுத்தூர் ஜில்லாக்களில் கிடைக்கின்றன. மற்றும் அதற்கு வேண்டிய மாங்கனீஸ் என்ற உலோகம், விசாகப்பட்டினம், பல்லாரி, அனந்தபூர் என்ற ஜில்லாக்களிலும், மைசூர், சாந்தூர் சமஸ்தானங் களிலும் ஏராளமாக அகப்படுகிறது. மேலும் வேண்டிய சரக்கு நிலக்கரி என்பது ஒன்றே. அதுவும் பழுப்பு நிறத்தில் தென் ஆர்க்காடு ஜில்லாவில் பலவிடங்களில் ஏராளமாகப் பூமியில் புதைபட்டுக் கிடக்கிறது என்று நிபுணர்கள் சொல்லுகின்றனர். அதற்கு லிக்னைட் என்று பெயர். அதுவும் ஒரு நல்ல எரிபொருளே; இரும்பை உருக்குவதற்கு ஏற்றது.

அஃதன்றியும் காட்டுக்கரியை (Charcoal) உபயோகித்தே மைசூர் சமஸ்தானத்தில் பத்ராவதி இரும்பு தொழிற்சாலையில் செய்வது போல, இரும்பை எஃகாக மாற்றலாம். அதற்கு வேண்டிய காட்டுக்கரியை சேலம் குன்றுகளில் உள்ள மரங்களிலிருந்தே செய்து கொள்ளலாம். இல்லை, நிலக்கரியே வேண்டும் என்றாலும் ஐதரா பாத் சமஸ்தானத்தில் உள்ள சிங்கரேணி என்ற இடத்தி லிருந்து தருவித்துக் கொள்ளலாம்.

### அலுமினியம்

மேலும் சேலத்தில் உள்ள சேர்வராயன் மலையில் ஏராளமாகக் கிடைக்கும் பாக்லைட் என்னும் கருப் பொருளிலிருந்து, திருவாங்கூர் சமஸ்தானத்தில் உள்ள ஆல்வாய் என்ற இடத்தில் அந்நாட்டு சர்க்கார் செய்து கொள்வது போல அலுமினியம் உற்பத்தி செய்து, அதைத் தகடுகளாக்ச் செய்துகொள்ளலாம்.

### சணல்

நம் நாட்டு வியாபாரத்துக்கு இன்றியமையாது வேண்டப்படும் சணல் மிகச் சிறிய அளவில் தான் ஆந்திர நாட்டிலும் திருவாங்கூரிலும் சுமார் 400 ஏகர்

நிலத்தில் மட்டுமே இப்போது பயிரிடப்பட்டு வருகிறது. இது போதாது. இன்னும் எங்கெங்கே சணலைப் பெருவாரியாகப் பயிரிட வசதி யிருக்கிறதென்று கண்டு பிடித்து, சணலை அதிகமாகப் பயிர் செய்து, அதைக் கொண்டு நமக்கு வேண்டிய சணல் பைகளையும் கயிறுகளையும் தயாரித்துக் கொள்ளலாம். அல்லது சணலுக்குப் பதிலாகக் காசினி (Hemp) போன்ற வேறு ஏதாவது செடிகளிலிருந்து கயிறுகளையும் பைகளையும் தயாரிக்கலாமா என்பதையும் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

நீலகிரி ஜில்லாவில் முதுமலை ரிசர்வ் காட்டுப் பகுதியில் சுமார் 1200 ஏகர் நிலமும், மலையாளக் கரையில் பொன்னனி, ஏரநாடு, கள்ளிக்கோட்டை தாலுகாக்களில் சுமார் 3000 ஏகர் நிலமும் சணல் (Jute) பயிரிட ஏற்றதாக இருப்பதாகவும் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்த யோசனைகளை ஆராய்ச்சி செய்து நடைமுறைக்குக் கொண்டு வந்து, நாமும் வடநாட்டில் உள்ள அஸ்ஸாம், பீகார், வங்காளம், ஒரிஸா மாகாணங்களைப்போல அதிகமாகச் சணல் உற்பத்தி செய்ய வேண்டும்.

உணவுப் பொருள்களைத் தயாரிப்பதில் உபயோகிக்கப்படும் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் முதலியவைகளை, சோப், மெழுகுவர்த்தி செய்வதற்கு உபயோகிப்பதைத் தடுத்து, அவற்றிற்குப் பதிலாகப் பருத்திக் கொட்டை, இலுப்பைக் கொட்டை ஆகியவைகளிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயை எவ்வளவு தூரம் உபயோகிக்கலாம் என்றும் சர்க்கார் தொழிற்சாலைகளில் ஆராய்ச்சி செய்யப்படவேண்டும்.

## வாகன அமைப்பு

நம் நாட்டு மக்களின் நன்மைக்கு மிக அவசியமாக வேண்டிய மோடார் வண்டிகள், புகைக் கப்பல்கள்,

ஆகாய விமானங்கள் இப்போது வெளி நாடுகளிலிருந்து தருவிக்கப்படுகின்றன. இனி அந்நாடுகளிலிருந்து தொழில் நிபுணர்களை நம் நாட்டுக்கே வரவழைத்து, அவர்களின் உதவியைக் கொண்டு அவ் வாகனங்களை நம் நாட்டிலேயே செய்து கொள்ள வேண்டும்.

இப்போதே பெங்களூரில் ஆகாய விமானம் அமைக்கும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. விசாகப்பட்டினத்தில் கப்பல் கட்டும் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. சென்னைக் கருகில் உள்ள குரோம் பேட்டையில் நமது சர்க்கார் பஸ் கூண்டுகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று வைத்து நடத்துகின்றனர். அவ்வாறிருக்க, பம்பாயில் உள்ள மாதிரி நம் மாகாணத்திலும் மோட்டார் செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏன் வைத்து நடத்தக் கூடாது ? மோட்டார் வண்டிக்கு வேண்டிய என்ஜின்களை நாம் தயாரிக்க முடியாமற் போனாலும் மோடார் பாடிகளையாவது அமைத்துக் கொண்டு, அமெரிக்கா போன்ற வெளி நாடுகளிலிருந்து மோடார் என்ஜின்களை வரவழைத்து, அவற்றில் பூட்டிக் கார்களைத் தயாரிக்கலாம்.

மோடார் வண்டிகளைச் செய்வதற்கு முன் சைகில்களையாவது செய்யத் தொழிற்சாலைகளை அமைக்கலாம். மோடார்கார்களுக்கு வேண்டிய பெரிய பாட்டரிகளைச் செய்ய முடியாமற் போனாலும், டார்ச் லைட்டுகளுக்கு வேண்டிய சிறிய பாட்டரிகளையாவது பைரலுசைட் என்ற பொருளைக் கொண்டு நாம் செய்யலாம். அதற்கு வேண்டிய ஆலோசனைகளைச் சொல்லக் கோவையில் உள்ள தோழர் ஜி. டி. நாயுடு போன்ற நிபுணர்கள் பலர் நம் நாட்டில் இருக்கிறார்கள். ஜெர்மனியிலேயே முதல் பரிசு பெற்ற க்ஷவரக் கத்திகளையும், எலெக்டிரிக் மோடார்களையும் 1941 முதலே நாயுடு அவர்கள் தயாரித்து வருகிறார். இவருக்கு வேண்டிய அளவுக்கு எஃகுத் தகடும், செம்புக்

கம்பியும் கொடுத்து விட்டால், அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து இப்போது இறக்குமதி செய்யப்படும் பிளேடுகள், மோடார்களில் பெரும்பாகம் குறைந்து, நம் நாட்டுப்பொருள் வெளியேருமல் நம் நாட்டிலேயே தங்கியிருக்கும்.

## மூலதனம்

மேலே சொல்லியிருப்பதைப் போன்ற பெரியதொழிற் சாலைகளையும், ஆராய்ச்சி சாலைகளையும் துவக்கப் போதிய மூலதனம் நம் நாட்டு மக்களிடம் இல்லாமல் இல்லை. அண்ணுமலை சர்வகலாசாலையையும், தமிழ் இசை இயக்கத்தையும் தோற்றிவைத்த செட்டி நாட்டு ராஜா போன்ற நாட்டுப் பற்றுடைய செல்வந்தர்கள் பலர் நம்மிடையில் உள்ளனர். சர்க்கார் ஆரம்பிக்கும் தொழிற் சாலைகளில் கூட்டாளிகளாகச் சேர்ந்துகொள்ள, அவர்கள் தயாராக இருப்பர்.

மேலும், நம் நாட்டில் உள்ள மதுரை, ராமேஸ்வரம், திருப்பதி கோயில்களில் எத்தனையோ கோடிக் கணக்கான ரூபாய், வெள்ளி ரதங்களாகவும், வாகனங்களாகவும், தங்கக் கோபுர கலசங்களாகவும், சாமிகளின் வைரக் கிரீடங்களாகவும் விருத்தி செய்ய முடியாத நிலைமையில் முடங்கிக்கிடக்கின்றன. அதோடு கூட நம் நாட்டில் ஆண்டுக்கு, பதினுயிரம் ரூபாய்க்குமேல் வருமானமுள்ள கோயில்கள் 100 உண்டு; ஒரு லக்ஷ ரூபாய்க்கு மேல் வரும்படியுள்ள கோயில்களும் மடங்களும் 20 உண்டு. திருப்பதி வெங்கடேச பெருமாள் பெயரில், அவ்வாலயத்தின் வருமானத்தைக் கொண்டே பள்ளிக்கூடம் ஒன்றை நடத்துவதுபோல, அவர் பெயராலேயே ஒரு பருத்தி நெசவாலையோ, தொழிற்சாலையோ, மின்மனையோ நடத்தி, அதன் வருமானத்தைக் கொண்டு அப்பெருமாளின் பக்தர்களுக்கு உணவளித்தால் என்ன கெட்டுப்போகும்?

மேலும் கோயில்களில் உள்ள பாழடைந்து கிடக்கும் விசாலமான மண்டபங்களைப் புதுப்பித்து, அவற்றில் அவ்வவ்வூருக்கு வேண்டிய ஆரம்ப பள்ளிக்கூடங்களையும் மாணவர் விடுதிகளையும், சமூகக் கல்விச்சாலைகள், புத்தக நிலையங்கள், வாசகசாலைகள் முதலியவைகளையும் அமைத்து, நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கு வழி கோலலாம்.

## 4. தென்னாட்டின் ஒற்றுமை

### சமஸ்தானங்களின் கூட்டுறவு

மேல்சொன்ன முயற்சிகளை எல்லாம் சுலபமாகவும் வெற்றிகரமாகவும் நடத்துவதற்கு, மைசூர் கொச்சி திருவாங்கூர் சமஸ்தானங்களின் கூட்டுறவு அவசியம் வேண்டும். இம்மூன்று சமஸ்தானங்களும் நீண்ட காலத்துக்கு முன்பு சென்னை சர்க்காரின் அதிகாரத்திலேயே இருந்தன ; இடையில்தான் மத்திய சர்க்காரின் அதிகாரத்தின் கீழ் வைக்கப்பட்டன. மேலும் அச்சமஸ்தானங்களில் உள்ள மக்களும் திராவிட மக்களே ; பேசுவதும் திராவிட மொழிகளே. ஆகவே, அந்த சமஸ்தானங்கள் நம்மோடு சேர்ந்து வாழ்வது இயற்கையே ஆகும். அம்மாதிரியான கூட்டுறவால் இருதிறத்தாருக்கும் லாபமே உண்டாகும். உதாரணமாக, மைசூர் சமஸ்தானம் தமிழ்நாட்டிலிருந்து லிக்னைட் என்ற பழுப்பு நிலக்கரியையும், வட சர்க்கார், ராயலசீமாவிலிருந்து மாங்கனீசையும், அப்பிரகத்தையும் பெற்று, இரும்பைச் சுலபமாக எஃகு ஆக்கிக்கொள்ளலாம். கொச்சியும், திருவாங்கூரும், தமிழ்நாட்டிலிருந்தும், ராயலசீமாவிலிருந்தும் பருத்தியைப் பெற்று ஆடைகளைத் தயாரித்துக் கொள்ளலாம். திருவாங்கூர் கடற்கரையில் கிடைக்கும் தோரியம், யுரேனியம் ஆகியவைகளை நாம் கொண்டுவந்து அணுக்குண்டு, அணுசக்தி முதலியவைகளை உற்பத்தி செய்து பயன் பெறலாம். ஆகவே, அம்மாதிரியான கூட்டுறவு தாராளமாகக் கிடைத்தால், திராவிடநாடு வெகு விரைவில் மிகச் சுலபமாக விருத்தியடையும் என்பதற்கு ஐயம் இல்லை. அதை யறிந்தே இந்திய சர்க்காரின் பொருளாதார ஆலோசகரான டாக்டர் பி. ஜே. தாமஸ் என்பவர், சிறிது காலத்துக்கு முன் நம் நாட்டுக்கு வந்திருந்தபோது பின்வருமாறு பேசினார் :

சென்னை மாகாணம், திருவாங்கூர், கொச்சி, மைசூர் சமஸ்தானங்கள் ஆகியவைகளை ஒன்றுசேர்த்து ஒரு கூட்டு மாகாணமாகத் தென்னிந்தியா அமைக்கப்படவேண்டும் என்றும், அப்படி அமைக்கப்பட்டால், திருவாங்கூரில் உள்ள அபரிமிதமான தண்ணீரை நல்ல வழியில் பயன் படுத்தப், பெரியாறு நதியில் கடல்மட்டத்துக்கு மேல் 3000 அடியில் ஓர் அணைக்கட்டைக் கட்டி, அதிலிருந்து பைகாரா, மேட்டூர், பள்ளிவாசல் திட்டங்களில் கிடைக்கும் மொத்த அளவுக்கும் அதிகமாக மின்சார சக்தியைப் பெறமுடியும் என்றும், அதுபோன்ற விரிந்த திட்டங்களை நடத்துவதற்கு அம்மாதிரியான கூட்டாட்சி வழிவகுக்கும் என்றும், அத் திட்டங்களின் உதவியால் நீர்ப்பாசன வசதிகளும் அதிகமாகி, உணவு உற்பத்தியைப் பெருக்கி, இந்நாட்டில் இப்போது உலவும் உணவு நெருக்கடியைத் திருப்தியான முறையில் சமாளிக்க இயலும் என்றும், அதனால் நாட்டின் பொருளாதாரம் நிலைக்கமுடியாத அளவில் பெருகும் என்றும் வலியுறுத்திப் பேசினதாக திருவாங்கூர் சமஸ்தானத்திலிருந்து வெளிவரும் 'மலையாள மனோரமா' என்ற பத்திரிகை கூறுகிறது.

## மொழிவாரி மாகாணங்கள்

ஆனால் முன்னமே தங்களுக்கென தனி ஆந்திரம் வேண்டும் என்று ஆந்திரரும், ஐக்கிய கேரளம் வேண்டும் என்று மலையாளிகளும், ஒன்றிய கர்னாடகம் வேண்டும் என்று கன்னடியர்களும் கிளர்ச்சி செய்துகொண்டுள்ளனர். அவர்கள் எல்லாரும் திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஆவர்; அவரவர்கள் பெருவாரியாக வசிக்கும் பிரதேசங்கள் தனி அரசுகளாக இருக்கலாம். ஆனால் அவ்வரசுகளின் பொருளாதாரம் குறையுடையதாகவே இருக்கும். உதாரணமாக மைசூரில் இரும்பு அகப்படும்; அதை உருக்கி எஃகாகச் செய்வதற்கு வேண்டிய

சுண்ணும்பு, டாலமைட், மாங்கனீஸ், நிலக்கரி ஆகியவை களில், சுண்ணும்பு மாத்திரம்தான் அங்கே அகப்படும். ஆகவே டாலமைட் தமிழ்நாட்டில் உள்ள சேலம் ஜில்லா விலிருந்தும், மாங்கனீஸ் ஆந்திரதேசத்தில் உள்ள ராயல சீமாவிலிருந்தும், நிலக்கரி ஐதராபாத் சமஸ்தானத்திலிருந் தும் தருவிக்கப்பட வேண்டும். இந்நாடுகள் அனைத்தும் ஒரு கூட்டாட்சியில் (Federation) சேர்ந்திருக்குமானல், ஒரு பகுதியினரிடமிருந்து மற்ருெரு பகுதியினர், மிகச் சுலபமாகவும், அதிகமாகப் பேரம் பேசாமல் கவுரவமாக வும், பண்டமாற்று (Barter) மூலமே, வேண்டிய பொருள் களைப் பெற்றுக் கொள்ளலாம். ஆகவே திராவிட மக்கள் தமிழர், ஆந்திரர் என்று சண்டையிட்டுக் கொள்வதை விட்டு, இக் கூட்டாட்சி விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## ஒன்றிய திராவிடம்

பூகோள ரீதிப்படி வடக்கே கோதாவரி, கிருஷ்ணு என்ற பெருநதிகள், மற்ற 3 பக்கங்களிலும் கடல்கள் ஆகிய இயற்கை எல்லைகளை யுடைய ஒரே இடத்தில், ஒரே இனம், ஒரே கலை, நாகரிகம், பண்பு, மொழி ஆகியவைகளால் ஒன்று சேர்க்கப்பட்டுள்ள திராவிட மக்களை ஒரு தேசிய இனமாகக் (Nation) கொள்வதில் ஒருவருக்கும் ஆட்சேபம் இருக்காது. ஒருலட்சம் சதுர மைல் பரப்பையும், 4½ கோடி மக்களையும் கொண்ட பிரிட்டன் தனிநாடாக இயங்கும் போது, அடிப்படையான மொழியிலும் கலாசாரத்திலும் ஒன்றுபட்ட திராவிட மக்கள் வாழும் 1½ லட்சம் சதுரமைல் பரப்பும், 5 கோடி மக்களையும் கொண்ட திராவிடநாடு ஏன் தனிநாடாக இருக்கக் கூடாது?

அப்படித் திராவிடம் தனி நாடாக ஆனபோதிலும், இந்திய யூனியனுடனும் மற்ற நாடுகளுடனும் இப்போது

உள்ளது போன்ற கூட்டுறவுக்கு யாதொரு கெடுதியும் நேராது. அதற்கு மாறாக இந்திய யூனியனும், திராவிட நாடும் ஒன்றுக்கொன்று உதவியாகவே இருக்கலாம். நம் நாடு தனி ஆகிவிட்டால் வட நாட்டாரின் சுரண்டலினால் இங்கே ஏற்பட்டுள்ள மனக்கசப்பு நீங்கும். பழைய காலத்தில் பல தடவைகளில் நேர்ந்தது போல, வட இந்தியாவுக்கு ஆபத்துகள் நேரிடும் போதெல்லாம், இப்போது காஷ்மீரில் போய் உதவுவது போல, தென்னாட்டுப் படைப்பலமும், பணப்பலமும், அதன் உதவிக்குச் சென்று உதவும். மேலும் திராவிடநாடு 1500 மைல் நீளமுள்ள கடற்கரையை உடைத்தாயிருப்பதால், விரைவில் கப்பல் வியாபாரத்திலும், கப்பல் படையிலும் மிகுந்த பலம் உடையதாக ஆகிவிடும். அதனால் வட நாட்டுக்கு ஆபத்து ஏற்படும்போது, அதற்கு இன்னும் அதிகமாக உதவக்கூடிய நிலைமையில் திராவிடம் இருக்கும்.

## மூலாதாரப் பொருள்கள்

அவ்வாறு தனித்திருந்தால். நம் வாழ்க்கை வசதிகளுக்கு வேண்டிய மூலாதாரப் பொருள்கள் கிடைக்காமல்,பொருளாதாரக்கேடு உண்டாகுமோ என்று நாம் அஞ்ச வேண்டுவதும் இல்லை. நமக்குப் போதுமான நெல் முதலிய உணவு தானியங்கள் நம் நாட்டிலேயே விளைகின்றன. கோதுமையும் வார் கோதுமையும் சுமார் 3000 ஏகர் நிலங்களில் பயிராகின்றன. இன்னும் அதை விருத்தி செய்யலாம். எவ்வெவ் விடங்களில் கோதுமையைப் பயிரிடலாம் என்று ஆராய சில நிபுணர்களை நம் மாகாண சர்க்கார் முன்னமே அமர்த்தி இருக்கின்றனர்.

நம் வாழ்க்கை வசதிகளுக்கு வேண்டிய பருத்தி, பட்டு, கம்பள உடைகள், சோப், கண்ணாடி, காகிதம், தீக்குச்சி முதலியவைகள் நம் நாட்டிலேயே தயாரிக்கப் படுகின்றன. அவைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்

களில், பட்டும், பருத்தியும், எண்ணெயும் நம் நாட்டிலேயே கிடைக்கின்றன. பத்திரிகைகளுக்கு வேண்டிய காகிதங்களையும் உயர்ந்த ரகக் கம்பள ஆடைகளையும் வெளி நாடுகளிலிருந்து, இப்போது இந்திய யூனியன் மூலமாகப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக, நேராகவே தருவித்துக்கொள்ளலாம்.

தொழிற்சாலைகளுக்கு வேண்டிய நிலக்கரிக்குப் பதிலாக, நம் நாட்டில் பூமிக்கடியில் இருப்பதாகச் சொல்லப் படும் லிக்னைட்டை உபயோகிக்கலாம். அது முடியாமற் போனால், ஐதராபாத் சமஸ்தானத்திலிருந்து பண்டமாற்று மூலமாகவே பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் தொழிற்சாலைகளில் உபயோகப் படுத்தும் இரும்புச் சாமான்களில் பல நம் நாட்டில் இப்போதே தயாரிக்கப்பட்டு வருகின்றன. பெரிய சாமான்களையும் யந்திரங்களையும் இப்போது பெறுவது போலவே, வெளி நாடுகளிலிருந்து நேராகவே தருவித்துக் கொள்ளலாம்.

அனந்தபூர் முதலிய விடங்களில் தங்கச் சுரங்கங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப் பற்றி நம் நாட்டுச் சர்க்கார் என்றைக்காவது தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்களா? இல்லை. ஏன்? அந்தப் புதைந்து கிடக்கும் தங்கத்தைத் தோண்டி எடுக்க அவர்களுக்கு உரிமை இல்லை. அவ்வுரிமை மத்திய சர்க்காரின் வசத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. திராவிடம் பிரிந்தால், மேல் சொன்ன விடங்களை ஆராய்ந்து பார்த்து, தங்கத்தை வெளியில் கொண்டு வந்து நம்முடைய பொக்கிஷ நிலையைப் பெரிதும் உயர்த்திக் கொள்ளலாம்.

பெட்ரோல், மண்ணெண்ணெய் சுரங்கங்கள் நம் நாட்டில் இருப்பதாக இப்போது தெரியவில்லை. அவைகளை பர்மா, பாரசீகம் முதலிய வெளி நாடுகளிலிருந்து இது வரை பெற்று வருவது போலவே பெற்றுக்கொள்ளலாம்.

கரும்பு பயிர் நம் நாட்டில் அதிகம். அவற்றிலிருந்து சர்க்கரை செய்யும் ஆலைகளும் பல உள்ளன. பனஞ்சாறு, தென்னஞ் சாறு ஆகியவற்றிலிருந்தும் இப்போது சர்க்கரையும் கற்கண்டும் நம் நாட்டில் செய்யப்படுகின்றன. கரும்பின் தரத்தை உயர்த்திவிட்டால், நம்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரையே நமக்குப் போதுமானதாயிருக்கும்.

இப்போது நம் நாட்டில் வெளி நாடுகளிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்யப்படுகிறது. அப்படியிருந்தும் சர்க்கரைப் பஞ்சம் அடிக்கடி ஏற்படுகிறது. அதற்குக் காரணம் நம் நாட்டில் வந்து தங்கியுள்ள மார்வாரிகள், குஜராத்திகள் போன்ற வடவர்கள் சர்க்கரையைக் கொண்டு தயாரிக்கப்படும் பண்டங்களை அதிகமாக உண்டு வாழ்பவர்கள் என்பதே. திராவிடம் பிரிந்தால் நம் நாட்டில் சர்க்கரைப் பஞ்சமே ஏற்படாது.

கரையோரங்களில் உள்ள நூற்றுக் கணக்கான உப்பளங்கள் நமக்கு வேண்டிய உப்பு அவ்வளவை உதவுகின்றன.

கடலைப் பருப்பு தவிர்த்த மற்ற எல்லாப் பருப்பு வகைகளும், எண்ணெய் வித்துகளும் நம் நாட்டில் தேவைக்கு அதிகமாகவே விளைகின்றன. கடலையை பஞ்சாப்பிலிருந்து தருவித்துக் கொள்ளலாம்.

நம் நாட்டுக்கு வடக்கேயுள்ள பாகிஸ்தானில் புன்செய்த் தானியங்கள், கரும்பு, டீ, காப்பி, எண்ணெய் வித்துகள் மிகக் குறைவு. வேர்கடலைச் செடியைக் கண்ணில் காணவே முடியாது. அப்பிரகம், மாங்கனீஸ் போன்ற முக்கியமான சுரங்கப் பொருள்களும் அங்கே கிடையாது. அவைகள் எல்லாம் நம் நாட்டில் தேவைக்கு அதிகமாகவே அகப்படுகின்றன. ஆகவே அவைகளைப் பாகிஸ்தானுக்கு அனுப்பிவைத்து, அவைகட்குப் பதிலாக நம் நாட்டில் கிடைக்காத கந்தகம், சணல், கோதுமை,

உயர்ந்த ரகப் பஞ்சு, குரோமைட் முதலியவைகளைப் பண்டமாற்று மூலமாகவே பெற்றுக்கொள்ளலாம்.

## பொக்கிஷ நிலே

திராவிடம் தனியாகப் பிரிந்துவிட்டால், நம் நாட்டிலிருந்து மத்திய சர்க்காருக்கு இப்போது அனுப்பப்பட்டு வரும் 60 கோடி ரூபாய் நமக்கு மிச்சமாகும். நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் புகையிலையின் மேல் வரி விதித்து, 300 லட்சம் ரூபாய் வசூல் செய்து மத்திய சர்க்காருக்கு அனுப்பிவிட்டு, அவர்களிடமிருந்து 22 லட்சம் ரூபாயை நமது பங்காகப் பெற வேண்டியதில்லை. நம் நாட்டு மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வருமான வரித் தொகையை அப்படியே கொடுத்துவிட்டு, 100 ரூபாய்க்கு 18 ரூபாய் வீதம் அவர்களிடமிருந்து திரும்பிப் பெற வேண்டிய நிலேயும் நீங்கிவிடும். மத்திய சர்க்காரிடமிருந்து நமக்கு யாதொரு உதவியும் வேண்டியிராது. புதிதாக யாதொரு வரியையும் விதிக்காமலும், முன்னமே விதித்துள்ள வரியின் விகிதத்தை உயர்த்தாமலும், தோழர் பி. ஜே. தாமஸ் அவர்கள் சொன்னதுபோல பல நீர்ப்பாசனத் திட்டங்களை நாம் வகுத்து, அவற்றைக் கொண்டு இப்போது தரிசாகக் கிடக்கும் 2 கோடி ஏகர் நிலங்களையும் பயிர் செய்யலாம்; நம் நாட்டுக் கிராமங்களுக்கெல்லாம் உதவக்கூடிய அளவுக்கு மின்சாரத்தையும் பெருக்கிக் கொள்ளலாம். இவற்றிலிருந்து நமது வருமானமும் பெருகும்.

சட்டரீதியாக திராவிடம் பிரியுமானல், இந்தியாவுக்கு விடுதலை அளிக்கப்பட்டபோது இருப்பாக இருந்த தொகை 325 கோடி ரூபாயிலும், இந்தியாவுக்கு இங்கிலாந்திலிருந்து சேரவேண்டிய இருப்புத் தொகை (Sterling Stocks) 700 கோடியிலும், நமக்கு ஆறிலொரு பங்கு

சேர வேண்டும். ஏனெனில் நம் நாட்டின் ஜனத்தொகை இந்திய யூனியன் ஜனத்தொகையில் ¼ பாகம்.

அதோடு இந்திய யூனியன் வசத்தில் இப்போது இருந்து வரும் ராணுவ ஸ்டோரிலும், போர்க் கப்பல்கள், ஆகாய விமானங்கள், ஆகியவற்றிலும் நமக்குப் பங்கு கொடுக்கப்பட வேண்டும். நாமும் ஆங்கில சர்க்காரிடமிருந்து இந்திய யூனியன் ஏற்றுக்கொண்ட கடன் தொகையில் ¼ பங்கு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

இவற்றை யெல்லாம் வெற்றிகரமாக நடத்துவதற்கு நம் நாட்டில் மக்களின் நன்மைக்கான பணிகள் எவ்வெவ் விதங்களில் செய்ய முடியும் என்ற நோக்கத்தில் கண்ணும் கருத்துமாய் சர்க்கார் இருக்க வேண்டும். அப்போது தான், அருமையான உலோகங்களையும் உப்புகளையும் பூமிக்கடியிலும், பெரிய மின்மினிகளை ஆற்றங் கரையிலும் வைத்துக் கொண்டு, குறைவான கூலிவாங்கி, அரைவயிறு உண்டு, அரைநிர்வாணமாக இருந்து, நடுத்தெருவிலும் சாலை ஓரங்களிலும் உறங்கி, அபாரமாக கஷ்டப்பட்டு வேலை செய்யும் தொழிலாளர்களை உடைய நம் நாடு, தொழில் துறையிலும் வியாபாரத் துறையிலும் விருத்தி யடைந்து உலக மன்றங்களில் தலை நிமிர்ந்து நிற்க முடியும்.

வாழ்க திராவிடம் !

Printed at the Sadhu Press, Royapettah, Madras - 14.